Voucher Copy

Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஐப்பசி 5 ஆம் நாள் | ஜ. அவ்வல் 10 | (21-10-61) | சனிக்கிழமை | இதழ் 214

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!

டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்

விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

கள்ளக் குடியேற்றம்

# "சிங்களவர் - தமிழர்

## ஒன்று சேர்ந்து நிறுத்த வேண்டும்"

### பார்லிமெண்டில் நிதிமந்திரி பேச்சு

## டாக்டர் ஈ.எம்.வி - ஆர். ஜி. மோதல்

### கள்ளக் குடியேற்றத்திற்கு சமஷ்டியினர் ஆதரவாம்!

"கசிப்பு மன்னர்கள்"தான் உடந்தை என்கிறார் உடுவில் எம். பி.

கொழும்பு, வெள்ளி

**"தமிழர்களின் நியாயமான உரிமைகளையும் கோரிக்கைகளையும் வழங்குவதன் மூலமே ஐக்கிய இலங்கை உருவாக்கமுடியும். துப்பாக்கி முனையில் சிங்களத்தைத் திணிப்பதன் மூலமோ தமிழ் சமுதாயத்தை துன்புறுத்துவதன் மூலமோ ஐக்கிய இலங்கையை அமைக்க முடியாது".**

இவ்வாறு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இன்று பார்லிமெண்டில் குடியேற்ற வெளியேற்ற சட்டத்திருத்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பேசுகையில் சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு சமஷ்டிக்கட்சி உடந்தையாக இருக்கிறதென்றார். இச் சமயம் டாக்டர் நாகநாதன் குறுக்கிட்டு "முழுப் பொய். சொன்னதை வாபஸ் பெறும்" என்றார்.

சபாநாயகர் ஆர். எஸ். பெல்பொல தலைமையில் ஜனப் பிரதிநிதிகள்சபை இன்று காலை மீண்டும் கூடியபொழுது நேற்றிரவு ஒத்திவைக்கப்பட்ட குடியேற்ற வெளியேற்ற சட்டத் திருத்த மசோதா மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

லங்கா சமசமாஜக் கட்சி அங்கத்தவரும் பாணந்துறை எம். பி.யுமான திரு. லெஸ்லி குணவர்த்தன பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

### நீதவானின் உரிமை

சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு உடந்தையாக இருந்ததாகச் சந்தேகித்துக் கைது செய்யப்படும் ஒருவரை பிணையில்செல்ல நீதிபதி அனுமதியளிக்கும்உரிமையை இந்த திருத்த மசோதா வாபஸ் பெற்றுவிடுகிறது. இது தவறான கொள்கை. மனுவின் மீது சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்படுபவர் பிணையில் செல்ல அனுமதியளிக்கும் உரிமை நீதிபதிக்கு அளிக்கப்படவேண்டும்.

இந்தத் திருத்த மசோதாவில் மற்றொரு பெரிய தவறு இருக்கிறது. இது திருத்தப்படவேண்டும். சந்தேகத்தின் மீது கைது செய்யப்படுபவர் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்துக்குள் நீதவானுக்கு முன் ஆஜர் செய்யப்படவேண்டும் சகலகைதிகளுக்கு உண்டு. இந்த உரிமை கைதியின் பாதுகாப்புக்கும் உறுதியளிக்கிறது. சட்டவிரோதக் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சட்ட விதிகள் அவசியமானவையென்றாலும் அச்சட்ட விதிகள் தனிப்பட்டவர்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும். சட்டங்கள் உத்தியோகத்தர்களுக்கு வேலைகளைச் சுலபமாக்குவதற்காக மட்டும் உருவாக்கப்படக் கூடாது.

சபையின் நிரந்தரக் கமிட்டியொன்றுக்கு இத் திருத்த

(5ம்பக்கம் பார்க்க)

## மீண்டும் யானை விரட்டல்

கொழும்பு, வெள்ளி

தெதுருஓயா யானைவிரட்டும் வேலை அடுத்த வருட முற்பகுதியில் இரண்டாவது தடவையாக மேற்கொள்ளப்படவிருக்கிறது. இதற்குஇராணுவத்தின் உதவியும் கோரப்படும். இதற்கான விரிவான வியரத்திட்டங்களைத் தயாரிப்பதற்கு மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

## ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கொழும்பு நிலையத்தைச் சேர்ந்த கருவாட்டு விற்பனைப்பகுதியைச் சேர்ந்த மூவர்மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது

நியூயோர்க், அக். 20

கடாங்கா 'அதிபர்' ஷோம்பேயுடன் ஐ. நா. பிரதிநிதி திரு. கியாரி செய்துகொண்ட ஒப்பந்தத்தை அங்கீகரிப்பது பற்றி ஆலோசனை செய்த ஐ. நாவின் காங்கோஆலோசனைக் கமிட்டி ஒப்பந்தத்தை அமுல் செய்யாமல் நிறுத்திவைத்துள்ளது.

## புதிய ஷரத்துக்களைக் கொண்ட மசோதா நிறைவேறியது!

கொழும்பு, வெள்ளி

**"சட்ட விரோதக் குடியேற்றப் பிரச்சினை சிங்களவரும் தமிழரும் ஒன்றாகச் சேர்ந்து தீர்க்க வேண்டியதொன்று. இதைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்கமுடியாது சட்டத்தின்மூலமே சமாளிக்கவேண்டும்" என்று பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று பார்லிமெண்டில் கூறினார்.**

**சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்புநடவடிக்கைகளை வலுப்படுத்தும் குடியேற்ற வெளியேற்ற சட்டத்திருத்த மசோதா நேற்று நிறைவேறியது. இத்திருத்தச் சட்டத்தின்படி சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்று சந்தேகிக்கப்படுபவர்களையும் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்களாகக் கருதப்படுபவர்களையும் கைதுசெய்வதற்கு ஆயுதப்படைகளைச்சேர்ந்த அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்.**

ஜனப்பிரதிநிதிகள்சபை நண்பகல் இடைவேளைக்குப்பின் கூடியபொழுது குடியேற்ற வெளியேற்றச் சட்டத்திருத்த மசோதாமீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்த நிதிமந்திரியும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா பேசினார்.

"தேசிய அத்தியாவசியமான ஒரு விஷயத்துக்காக ஒரு சட்டம் அவசியமாகும்பொழுது முதலில் ஜனநாயக உரிமைகளுக்கு உறுதியளிப்பதும் பின்னர்தான் மக்களின் பாதுகாப்புக்கு உறுதியளிப்பதும் எப்பொழுதும் சாத்தியமானதல்ல" என்று பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறினார். "இதுபோன்ற சந்தர்ப்பங்களில் முதலில் மக்களின் பாதுகாப்பைத்தான் கவனிக்க வேண்டும்" என்று நிதிமந்திரி கூறியபொழுது டாக்டர் நாகநாதன் குறுக்கிட்டு "பாதுகாப்பு இல்லையானல் ஜனநாயகமே இல்லை" என்று கூறினர்.

திரு பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:-

இந்தச்சட்ட ஷரத்துக்களை சில பொறுப்பற்ற ஆயுதப்படைகளைச் சேர்ந்தவர்கள் துஷ்பிரயோகம் செய்யக்கூடுமென்று அங்கத்தவர்கள் கூறினர்கள். புதிய சட்டங்களை நிறைவேற்றும்பொழுது இவ்விதம் கூறுவது சரியான வாதமல்ல. அரசாங்க ஊழியர்களிடத்தில் முன்பும் ஊழல் இருந்ததுதான் இன்னமும் இருக்கிறதுதான்.

### எனக்குத் தெரியாது

குற்றமற்ற எந்த ஒரு இலங்கைப் பிரஜையும், மூலச்சட்ட ஷரத்துக்களுக்கிணங்க நடவடிக்கையெடுக்கப்படுகையில் கஷ்டங்களுக்குள்ளானதாக எனக்குத் தெரியவில்லை.

கள்ளக் குடியேற்றக்காரர்கள் சட்டத்தை மீறுபவர்கள். இந்தப் பிரச்சினை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்படக் கூடியதல்ல; சட்டத்தின் மூலம் சமாளிக்க வேண்டிய பிரச்சினை இது.

சட்ட விரோதக் குடியேற்றம் இலங்கையிலுள்ளவர்களால் திட்டமிட்டு பெரிய அளவில் நடைபெறுகிறது. சட்ட விரோதக் குடியேற்றத் தொழில் வடக்கிலுள்ளவர்களாலோ தெற்கிலுள்ள சிங்களவர்களாலோ நடைபெறுகிறதென்று கூறுவது சரியல்ல. சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்று சேர்ந்து சமாளிக்கவேண்டிய பிரச்சினை இது.

சட்ட விரோதக் குடியேற்றம் ஒரு அரசாங்கத்துக்கு எதிராகச் செய்யப்படும் குற்றமாகவே கருதப்படுகிறது. கொலைக் குற்றத்துக்குச் சமமாகவே இது கருதப்படும்.

### தொண்டமான் கண்டனம்

இந்த திருத்த மசோதாவின் மீதான விவாதத்தில் நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமான் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

(8ம் பக்கம் பார்க்க)

## புத்தூருக்கருகில் கோரபஸ்விபத்து

### 15பேர் படு காயம்; சாரதியின் கால் முறிந்தது

நீர்வேலி, வெள்ளி

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டி என்னுமிடத்தில் இரண்டு இ. போ. ச. டீசல்பஸ்கள் மோதிக்கொண்டதனல் 17பேர் பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் சுமார் 60 பேருக்கு சொற்ப காயங்களேற்பட்டது. அவர்கள் அவ்வழியே வந்த வான்கள் மோட்டார் வாகனங்கள் மூலம் பல்வேறு ஆஸ்பத்திரிகளுக்கும் எடுத்துச் சென்றுசிகிச்சையளித்துஅனுப்பப்பட்டனர்.

இரண்டு பஸ்களின் முன் பக்கங்களும் முற்றாக சேதமடைந்தன. வாகனத்துக்குள் அகப்பட்டுக்கொண்ட சாரதி கந்தசாமியை வெளியேஎடுக்க கோடரி கொண்டு கதவை உடைக்க வேண்டியேற்பட்டது.

பலத்த காயமடைந்த சாரதியின் ஒரு கால் முறிந்துவிட்டது.

இந்த விபத்து காரணமாக போக்குவரத்து தடைப்பட்டது. விபத்துக்குள்ளான இரு பஸ்களுள்ளும் ஒரே இரத்த மயமாகக் காட்சியளித்தன.

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் சிறிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணுநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## வெளிமாணவர்களுக்கு புதிய நியதி

கொழும்பு, வியாழன்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவர்களாகத் தம்மைப் பதிவு செய்துகொள்ளும் மாணவர்கள் வெளியூர் பல்கலைக் கழகங்கள் எவற்றிலும் பட்டதாரிப் பரீட்சைகளுக்குப் பதிவு செய்து கொள்ளக்கூடாது இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஒருவரது பதிவு செல்லுபடியாக இருக்கும் வரை, அவர் வேறு எந்தப் பல்கலைக் கழகத்திலும் தமது பெயரைப் பதிவு செய்து கொள்ள முடியாது எனத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிமாணவர்களாகப் பதிவு செய்து பட்டம் பெற இருப்போர்களுக்கு இப்புதிய நியதியை இலங்கைப் பல்கலைக் கழகம் விதித்துள்ளது.

வெளிமாணவர்கள் எத்தனை தடவைகள் பரீட்சைக்குத் தோன்றலாம் என்பது பற்றியும் நியதி உண்டுபண்ணுவதெனப்பல்கலைக் கழகம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சையில் தேறிப் பின்னர் பல்கலைக் கழகத்தில் நடத்தப்படும் முதல் பரீட்சைகளுக்கு, மிகக் கூடியது ஐந்து தடவை மட்டுமே ஒரு மாணவனோ, மாணவியோ தோற்றலாம்.

இறுதிப் பரீட்சைகளுக்கு ஒருவர் நான்கு தடவைகள் மட்டும் தான் தோன்றலாம்.

லண்டன் பல்கலைக் கழகத்தின் பி. ஏ. பி. எஸ். சி. எல். எல். பி. பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்கள், பதிவுகால நியதி எதுவுமின்றி இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வெளிமாணவர்களாக அதே பரீட்சைகளுக்குத் தோன்றலாம்.

இந்த நியதிகள் இலங்கைப் பல்கலைக் கழக வெளிமாணவர்களாக அனுமதிக்கப்பட்டு 732 மாணவர்கள் மீதும் விதிக்கப்படும்.

## ரயில் வகுப்பு முறையை நீக்க முயற்சி

கொழும்பு, வியாழன்

இலங்கைப் புகையிரதங்களில் வகுப்பு வரையறை முறையை நீக்குவதற்குச் சிறிது சிறிதாக முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. புகையிரதங்களில் வகுப்பு வேறுபாடுகள் எதுவுமின்றி யாவரும் ஒரே கட்டணம் செலுத்திப் பிரயாணம் செய்யும் முறையை ஏற்படுத்துவதற்காகவே இம் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறைந்த தூரம் ஓடும் புகையிரதங்களில் ஒரு வகுப்பும் கூடிய தூரசேவைப் புகையிரதங்களில் இரண்டு வகுப்புகளும் வெகு விரைவில் அமைக்கப்படும். இரண்டு வகுப்புக்களும் கீழ் வகுப்பு, மேல் வகுப்பு எனப் பெயரிடப்படும்.

நெடுந்தூரம் பிரயாணம் செய்பவர் பலர் புகையிரதங்களில் உயர் வகுப்புக்கள் இருப்பதை விரும்புவதாகத் தெரிகிறது. அதிக பணங் கொடுத்துப் பிரயாணஞ் செய்ய இயல்புடையவர்களே இவ்வாறு விரும்புகிறார்கள். சிறிது அதிகமாகச் சௌகரியங்கள் தேவைப்படுபவர்களும் இதை விரும்புகிறார்கள்.

தினமும் பிரயாணிகளுக்கென ஓடும் 437 ரயில் வண்டிகளில் 54 வண்டிகளில் மட்டும்தான் முதலாம் இரண்டாம் வகுப்புக்கள் உள்ளனவாம். 223 வண்டிகளில் 2ம், 3ம் வகுப்புக்கள் உள்ளனவாம். 160 ரயில் வண்டிகளில் மூன்றும் வகுப்பு மட்டும்தான் உள்ளதாம்.

பிரயாணிகளின் விருப்பங்களும் நன்மைகளும் அதிகம் கருதிச் செய்யப்படாவிட்டாலும், இலங்கைப் புகையிரதங்களில் வகுப்பு முறையை நீக்குவதற்கு கடந்த சில வருடங்களாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

# கல்வித்துறையில் எம்மை புறக்கணிக்கும்நோக்கமா?

## கல்விமந்திரியிடம் வவனியாஎம்.பி.கேள்வி

முள்ளியவளை, வெள்ளி

"கல்வியமைச்சர் பாராளுமன்றத்திலும் வெளியிலும் பேசும்போதெல்லாம், 'புதிய பாடசாலைகளைத் தேவையான இடங்களிலெல்லாம் தொடங்குங்கள்' என உற்சாகப்படுத்திய காரணத்தினுலே, கல்வி வசதி குறைந்த வவனியாத் தொகுதியிலுள்ள பல கிராம முன்னேற்றச் சங்கங்கள், ஆரம்பக் கல்வி வசதிகூட இல்லாத தங்கள் கிராமங்களிலே ஏராளமான பொருட் செலவிற் புதுப் பள்ளிக்கூடக்களை நிறுவிப் பரிபாலித்துவருகின்றன. 1958—60 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட சுமார் 20 பாடசாலைகளை இன்னும் பொறுப்பேற்காததேன்? கல்வித்துறையில் எம்மைப் புறக்கணிக்கும் எண்ணம் காரணமா?"

வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம், கல்வியமைச்சருக்கும் வித்தியாதிபதிக்கும் அனுப்பி வைத்துள்ள நீண்ட மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த மகஜர் கூறுவதாவது: இப் பாடசாலைகளுட் பல, நான்கு ஆண்டுகளுக்கும் மேலாகவே நடைபெற்று வருகின்றன. அப் பாடசாலைகளைப் பொறுப்புஏற்பதில் அரசாங்கம் காட்டும் அசிரத்தைக்குக் காரணம் தெரியவில்லை. விரைவில் பொறுப்பேற்று, மாணவரின் கல்வி வளர்ச்சிக்கும், வேதனமின்றி வேதனைப்படும் ஆசிரியர்களின் அவலநிலைநீக்கத்திற்கும் விமோசனம் அளிக்கும்படி வேண்டுகிறேன்.

## வாதரவத்தை ஸ்ரீ கணேச இ. வி. கழகம்

நீர்வேலி, வெள்ளி

வாதரவத்தை ஸ்ரீ கணேச இளைஞர் விவசாயக் கழகத்தின் 8-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. வலி. கிழக்கு உணவு விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. வி. சின்னையா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

பேச்சுப்போட்டி, சங்கீதப் போட்டி, கட்டுரைப்போட்டி, விவசாயப் போட்டி முதலியவற்றில் வெற்றியீட்டியவர்களுக்கு திரு. சின்னையாவினுல் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கூட்டத்தில் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. எஸ். கந்தப்புவும் உரை நிகழ்த்தினர்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ச. துரைராசா, உபதலைவர்: வ. துரைசிங்கம், காரியதரிசி: க. ஜெயதிலகராசா, உபகாரியதரிசி: சி. தங்கத்துரை, தனதிகாரி: செ. விஞயகமூர்த்தி, உபதனுதிகாரி: ச. கிருஷ்ணபிள்ளை, பத்திராதிபர்: சி. கார்த்திகேசு

## கொழும்பு விவேகானந்த சபை நவராத்திரி விழா

கொழும்பு, வியாழன்

விவேகானந்த சபையில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவில் நடைபெற்ற பூசை, கூட்டு வழிபாடு, மற்றும் ஸ்ரீமதி பரஞ்சோதி இராசமாணிக்கம், செல்வி நாகபூஷணி இரத்தினம் ஆகியோர் அளித்த இசை விருந்து முதலியன ஒலி பரப்பப்பட்டன.

தினமும் பூசை, கூட்டுவழிபாடு, பேச்சு, இசை முதலிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**விஜயதசமி**

விஜயதசமித் தினத்தன்று பிரம்மஸ்ரீ சோ. இராமசாமி சர்மா வித்தியாரம்பம் செய்து வைத்தார். மாலை நிகழ்ச்சிகள் டாக்டர் தா. நல்லைநாதன் தலைமையில் நடைபெற்றன.

## பாடசாலைகளில் மரம் நாட்டும் போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

அடுத்த மாதம் 15-ந் திகதி தொடக்கம் ஓர் ஆண்டு காலத்திற்கு நடாத்தப்படும் மரம் நாட்டுப் போட்டியில் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமமாவிருத்திச் சங்கங்கள், பாடசாலைகள் ஆகிய ஸ்தாபனங்கள் கலந்து கொள்ளும். இவ்வியக்கத்தின் நோக்கமாவது ஒவ்வொரு இறைவரிப் பிரிவிலுமுள்ள பாடசாலைகளுக்கிடையே பாடசாலைத் தோட்டங்களிலும் முடிக்குரிய ஒதுக்கற் காணிகளிலும், தெருவோரங்களிலும், பூங்காவிலும் பயனுடையதாவரங்களை உண்டுபண்ணிக் காத்தற்குப் பாடசாலைகளைத் தூண்டுகோல்களாகப் பயன்படுத்தலேயாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டாரங்களிலே மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ள பாடசாலைகட்குப் போட்டிச் சின்னங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுவதுடன் மத்தியட்சகரின் அபிப்பிராயப் பிரசாரம் மதிப்புக்குரியதான ஏனைய பாடசாலைகட்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## கமக்காரர் கஷ்டம் ஆவன செய்வதாக எம். பி. வாக்குறுதி

முள்ளியவளை, வெள்ளி

தண்ணீரூற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபையைச் சேர்ந்தவர்களும் வவனியாத் தொகுதியிலுள்ள மற்றும் பல பலநோக்குச் சங்கங்களின் உறுப்பினர்களும் அடங்கிய மகாநாடொன்றில், முள்ளுக்கம்பி, நீர் இறைக்கும் யந்திரம் முதலியன கடனுக்குப் பெறுவதிலுள்ள கஷ்டங்களை வவ்னியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரத்திடம் திரு. க. தங்கராசா விளக்கிக் கூறினர்.

குறைகளைக் கேட்டறிந்த வவனியாப் பிரதிநிதி பேசுகையில் "நான் வெளியில் இல்லாத கடந்த 6 மாதகாலத்தில் எனது தொகுதி சம்பந்தமாகப் பல திருகுதாளங்கள் நடைபெற்றுள்ளதை அறிகிறேன். இதுபற்றி உடனே நான் கொழும்பு சென்று, விவசாய அமைச்சரைச் சந்தித்து உங்கள் குறைகளைத் தீர்க்க முயற்சி செய்வேன்" என்று கூறினர்.

# எம். பி.க்கள் சுற்றுலா

## அரசாங்கத்துக்குரூ.60,000செலவு

கொழும்பு, வெள்ளி

1960-ம் ஆண்டு ஜூலைமாதம் தொடக்கம் இலங்கை எம். பிக்களும் செனட்டர்களும் உட்பட 42 பேர் இலங்கையை விட்டு வெளிநாடு சென்று திரும்பியுள்ளார்கள். இவர்களுட் சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை வெளிநாடு சென்றுள்ளனர் எனவே அனைவரும் மொத்தமாக 55 தடவை பிரயாணம் செய்துள்ளார்கள்.

நேற்றைய தினம் பார்லிமெண்டில் டபிள்யூ தஹநாயக்கா எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கு முகமாக இந்த விவரங்களை நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா வெளியிட்டார்.

நிதிமந்திரியும் பிரதமரின் பார்லிமெண்டரிக் காரியதரிசியுமான திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பதில்கூறும் போது குறிக்கப்பட்ட காலப் பகுதியில் அதிகமாக ஊர்சுற்றியவர் பார்லிமெண்டேரியன் என். எம். பெரேராவே என்று குறிப்பிட்டார்.

1960 ம் ஆண்டு தொடக்கம் சமீப காலம்வரை டாக்டர் என். எம். 4 தடவை வெளியூர் சென்றிருக்கிறார். பிரதமரும், நிதிமந்திரியும்மும்மூன்று தடவை மட்டும் வெளியூர் சென்றுள்ளனர்

திரு. ஹக் பெர்னுண்டோ, திரு. ஜோர்ஜ் ராஜபக்சே, செனட்டர் ஈ. ஜே. கூறே, செனட்டர் சாம் பி. சி. பெர்னுண்டோ, திரு. சி. பி. டி. சில்வா ஆகியோர் இரு தடவை வெளிநாடு சென்றவர்களாவர்.

பார்லிமெண்டரிப் பிரதிநிதிகள் இம்மாதிரி வெளியூர்ப் பிரயாணங்கள் செய்ததில் இலங்கை அரசாங்கத்துக்கு 60,000 ரூபாய் செலவாகியது.

## "திருவருள் தான் சக்தி"

ஊர்காவற்றுறை, வெள்ளி

"சூரியன் உதிக்கத் தாமரை மலர்கிறது. சூரியனின் ஒருவித சக்தி தொழிற்படுகிறது. இதே போன்று தான் சிவத்தின் திருவருட் சக்தியால் ஆனமாக்கள் இயங்குகின்றன. அருட்பேருன சக்திகளையே நாம் இன்று பூசித்துவருகிறோம். சக்தி இன்றி எதுவும் இயங்காது அருட்சக்திகளை நாம் நினைத்து வழிபட சக்தி வழிபாடுகள் அவசியமானதாகும்." இவ்வாறு "சக்தி வழிபாடு" என்னும் பொருள்பற்றி வேலணை மத்திய கல்லூரி நவராத்திரிவிழாவில் உரை நிகழ்த்துகையில் வித்துவான் பொன். கனகசபை குறிப்பிட்டார்.

## குறுக்கோயா தோட்டக் கமிட்டி

நாவலப்பிட்டி, வியாழன்

நவலப்பிட்டி ஜில்லாவைச் சேர்ந்த குறுக்கோயா தோட்டக் கமிட்டித் தேர்தல் இ. தொ. காங்கிரஸ் நாவலப்பிட்டி ஜில்லாப் பொதுக் காரியதரிசி திரு. டி. ஜி. பீலிக்ஸ் தலைமையில் நடைபெற்றது.

பின் வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. வி. கே. முருகையா, காரியதரிசி: திரு. பி. கே. சண்முகம், உதவிக் காரியதரிசி: திரு. பி. மாயழகு, தனதிகாரி: திரு. எஸ். சேக்கன், கலெக்டர்: திரு. ஆர். அழகன், கமிட்டி அங்கத்தினர்: திருவாளர்கள். சுப்பையா, அந்தோனி, வேலு, மாசிலாமணி, முனியாண்டி, எஸ். கருப்பையா.

**மாதர்சங்கம்**

தலைவி: ஏ. ஆணைச்சி, காரியதரிசி: பி. காவேரி, கமிட்டி அங்கத்தினர்: டி. மாரியம்மா, ஆர். தெய்வானை, எம். மாரியாயி, எஸ். சின்னம்மா, வள்ளியம்மாள், கே. மாடத்தி.

**தொண்டர்கள்**

கப்டன்: திரு. கந்தையா, தொண்டர்கள்: சிவசாமி, நடராஜா, முருகேசு, எஸ். இராமர், பி. மாடசாமி, சுப்பையா, இராமலிங்கம், ராக்கையா.

## உதைபந்தாட்டப்போட்டியில் சென்பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்பபாணம்சென்பற்றிக்ஸ் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் முதலாவது பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கிடையில் ஓர் சினேகபூர்வமான பந்தாட்டம் நடைபெற்றது.

இப் பந்தாட்டப் போட்டி சென்பற்றிக்ஸ் கல்லூரி 3—0 கோல்களால் மகாஜனக் கல்லூரியைத் தோற்கடித்தது.

சென்பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ். முருகையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.


## திருமண அழைப்பு

**மணமகன்:** திரு. ஸ்ரீபாஸ்கரன் B. A.
[மயிலிட்டி கிராமச் சங்கத் தலைவர்; தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர்]

**மணமகள்:** செல்வி பாலாம்பிகை B. SC.
[வீமன்காமம் ஆங்கில பாடசாலை ஆசிரியை]

**காலம்:** 28—10—61 சனிக்கிழமை முற்பகல் 10-35—11-35 மணி.

**இடம்:** மணமகள் இல்லம், மல்லாகம்.

**வரவேற்பு:** மணமகள் இல்லத்தில் 29-10-61 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4—8 மணி. நண்பர்களையும், உறவினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. சுவாமிநாதன், தம்பதிகள், மயிலிட்டி.

அ. சரவணமுத்து, தம்பதிகள், மல்லாகம்.

# வடக்கு கடாங்காவில் சண்டை ஆரம்பம்

## ஷோம்பேயின் பிரதிநிதிகளை சந்திக்க அடௌலா மறுப்பு

லண்டன், அக். 20

வடக்கு கடாங்காவில் காங்கோ மத்திய அரசாங்கத் துருப்புக்களுக்கும் கடாங்கா துருப்புக்களுக்குமிடையில் அங்குமிங்குமாகச் சண்டை நடந்ததாகவும் இதில் மிகக் குறைந்த தொகையினரே சம்பந்தப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

இச்செய்தி பற்றி விரிவான உத்தியோகபூர்வமான தகவல் இன்னும் கிடைக்கவில்லை.

காங்கோ மத்திய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக கடாங்கா அதிபர் ஷோம்பே லியப்போல்ட்வில்லிக்கு அனுப்பி வைத்திருந்த கடாங்கா அதிகாரிகள் இருவரையும் சந்திப்பதற்கு காங்கோ பிரதமர் திரு. அடௌலா மறுத்துவிட்டார்.

ஷோம்பேயுடன் ஐ.நா பிரதிநிதி செய்து கொண்ட ஒப்பந்தத்தையிட்டு காங்கோ மத்திய அரசாங்கம் ஆத்திரம் கொண்டிருப்பதாகவும் இதுதான் பிரதிநிதிகளிருவரையும் சந்திப்பதற்குக் காரணமென்றும் கூறப்படுகிறது.

## ஐ. நா. காரியதரிசி

### அமெரிக்கா — ரஷ்யா முயற்சி தோல்வி

நியுயோர்க், அக். 19

திரு. ஹமர்ஷீல்டின் மறைவினால் காலியான ஐ. நா தலைமைக் காரியதரிசி பதவிக்கு ஒருவரை நியமிப்பது சம்பந்தமாக அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இருந்துவந்த பிரச்சினையைத் தீர்க்குமுகமாக அமெரிக்க பிரதிநிதி திரு. அடலாய் ஸ்டீவன்சனும் சோவியத் பிரதிநிதி திரு. ஸோரினும் நடத்திவந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துவிட்டன.

தலைமைக்காரியதரிசி நியமனத்திலுள்ள பிரச்சினைக்குத் தங்களால் தீர்வு காணமுடியவில்லையென திரு. ஸோரினும் திரு. ஸ்டீவன்சனும் இன்று தனித்தனியாக விடுத்த அறிக்கையில் தெரிவித்தனர்.

பர்மாப் பிரதிநிதி யு.தாண்ட் என்பவரை புதிய தலைமைக் காரியதரிசியாகத் தெரிவு செய்ய இருவரும் சில தினங்களுக்கு முன் ஒப்புக் கொண்டபோதிலும் துணைக்காரியதரிசிகள் நியமனம் சம்பந்தமாகவே இப்பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன வென்று கூறப்படுகிறது.

## சோவியத் குண்டுப் பரீட்சை

### ஐ.நா.வுக்கு வரும் பிரேரணை

நியுயோர்க், அக். 20

இம்மாத முடிவில் ஐந்து கோடி தொன் வெடி மருந்து சக்திகளைக் கொண்ட ஹைட்ரஜன் குண்டுப் பரீட்சை செய்யும் உத்தேச திட்டத்தைக் கைவிடுமாறு சோவியத் யூனியனை ஐ. நா. சபை கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கோரும் தீர்மானமொன்றை ஐ.நா. விசேஷ அரசியல் கமிட்டியில் கனடா, ஜப்பான், நோர்வே முதலிய ஆறு நாடுகள் கொண்டு வந்துள்ளன.

உத்தேச குண்டுப் பரீட்சைத் திட்டத்தைக் கைவிடுமாறு சோவியத் பிரதமர் குருஷ்சேவை கானா அதிபர் டாக்டர் நிக்ருமாவும் கேட்டுள்ளார்.

வெலிங்டனில் இரவும் பகலும் சோவியத் தூதரகத்தின் முன் ஆர்பாட்டம் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன.

## ஐ. நா. உயர் பதவிகள் பூகோள ரீதியில் அளிக்கயோசனை

நியுயோர்க், அக். 19

ஐ. நா.வில் உயர்தர பதவிகள் பூகோள ரீதியில் பிரித்து வழங்கப்பட வேண்டுமென்று ஐ. நா. வரவு செலவுத் திட்டக் கமிட்டிக் கூட்டத்தில் பேசிய இந்தியப் பிரதிநிதி திரு. ஆர். வெங்கட்ராமன் கூறினர்.

ஐ. நா. ஒரு தரப்பினருக்கு மட்டும் செவி மடுக்கும் ஸ்தாபனமாக இருக்கக் கூடாது என்றும் பல தரப்பு அபிப்பிராயங்களும் மதிப்பளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் திரு. வெங்கட்ராமன் கூறினர்.

ஐ. நா. வின் பண நெருக்கடி பற்றிக் குறிப்பிட்ட இந்தியப் பிரதிநிதி சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றார். ஐ. நா. தனித்தனிக் கமிஷன் கடமைகள் பற்றி புனராலோசனை செய்யப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## கணவன் எங்கே?

### 14 வருடமாகியும் தெரியாத மனைவி

நாவலப்பிட்டி, வியாழன்

கே. ஜி. பொடி மெனிக்கா என்ற இளம் பெண்ணின் (வயது 16) மரண விசாரணையின் போது சாட்சியமளித்த தாயார் கே. ஜி. கிமெனிக்கா தனது கணவன் பதினுன்கு வருடம் வீட்டுக்கு வரவில்லையென்றும் எங்கே சென்றுரென்பது தெரியாதென்றும் இதனுல் தான் வேருெருவரை மணம் புரிந்துகொண்டதாகவும் ஆனல் திருமணப்பதிவு செய்து கொள்ளவில்லையென்றும் கூறினர்.

கொத்மலையைச் சேர்ந்த மாஸ்வலை கிராமத்தில் வசித்த யுவதி பொடிமெனிக்கா இரத்த வாந்தியினல் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் மரணமானர். நாவலப்பிட்டி மரண விசாரணை அதிகாரி திரு. எல். பண்டார அத்தநாயக்கா விசாரணை நடத்தும்போதே மேற்கண்ட தகவல்களும் தெரிய வந்தது. டாக்டர் பாண பிரேத பரிசோதனை நடத்தினர்.

## நாட்டுநலனுக்கு தியாகம் அவசியம்

பலாங்கொடை, வெள்ளி

“ஒரு நாட்டினது முன்னேற்றத்துக்கு அந்தநாட்டு மக்களிடையே சுதந்திர எண்ணங்களும் தேசிய மனப்பான்மையும் காணப்படவேண்டியது அவசியம் அத்தோடு மக்கள் தமது நாட்டின் நலனுக்காகத் தம்மால் இயன்ற தியாகங்களையும் செய்யவேண்டும்.”

இவ்வாறு உதவிக் கல்வி மந்திரி திரு. வி. டி ஜி, கருணரத்ன ஹனுவெலையில் நடைபெற்ற ஸ்ரீ. சுதர்மா மகில சமித்தியின் ஆரம்பக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர் அவர் மேலும் கூறியதாவது:

சங்கங்களைப் பல வசதிகளுடனும் ஆரம்பித்துவைப்பது மட்டும் போதாது. சங்கங்களுக்குத் தாம் செய்யவேண்டிய கடமைகளை ஒவ்வொருவரும் செய்யவேண்டும். அதன் முன்னேற்றத்துக்குத் தாம் ஆற்ற வேண்டிய தொண்டுபற்றி ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். சாதிமத பேதம் பாராட்டாதுயாவரும் சங்கங்களைத்தும், நாட்டினதும் முன்னேற்றத்துக்குப் பாடுபடவேண்டும்.

‘ரஷ்யாதேசத்தில் ஆண்களிலும்பார்க்கப் பெண்களே அதிகமாக சமூகசேவைகளில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். எமது நாட்டில் சிறிதளவு அதிக நேரத்துக்கு வேலைசெய்தாலும் மக்கள் அதற்குப் பிரத்தியேக சம்பளம் கோருகிருர்கள். ஆனல் ரஷ்யாவில் மக்கள் தேசிய மனப்பான்மையோடு வேலைசெய்து வருகிருர்கள்.”

திருமதி வி. டி. ஜி. கருணரத்ன பேசுகையில் தேசிய நலனுக்காகப் பெண்கள் அதிகம் பாடுபட வேண்டும் என்று கூறினர்.

## ஆஸ்பத்திரி சுவீப் முடிவுகள்

முதலாவது பரிசு:
06C 0536 — ரு 63,925

இரண்டாவது பரிசு:
07Z 0620 — ரு 34,462-50

மூன்ருவது பரிசு:
12U 0360 — ரு. 17,231-25

பரிசு ஒன்றுக்கு ரு. 685-25 பெறும் ஏனைய 25 பரிசுகள்.

| | |
|---|---|
| 01K 0323 | 05K 0218 |
| 08M 0528 | 13G 0448 |
| 10V 0533 | 05O 0666 |
| 02B 0327 | 08F 0003 |
| 13D 0345 | 03T 0880 |
| 05X 0387 | 09R 0536 |
| 09S 0820 | 17W 0617 |
| 06B 0562 | 17E 0054 |
| 01S 0125 | 12W 0046 |
| 16K 0517 | 14X 0422 |
| 11Z 0452 | 08R 0333 |
| 19W 0527 | 21K 0265 |
| 15J 0890 | |

## றக்குவானையில் பெரியம்மை

றக்குவானை, வெள்ளி

றக்குவானையில் பெரியம்மை நோய் பரவி வருவதாகத் தெரிகிறது. றக்குவானையிலுள்ள சுகாதாரத்பகுதி அங்குள்ள மக்களனைவருக்கும் பெரியம்மை தடுப்புப் பால் கட்டி வருகிறது.

பெரியம்மை தடுப்புப் பால் கட்டிக்கொண்டவர்களில் கல்வி அமைச்சுப் பார்லிமெண்டரிக் காரியதரிசியும் ஒருவராவர்.

## ஷோம்பே நிபந்தனை

எலிஸபெத்வில்லி, அக். 19

சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் கடாங்கா பிரச்சினை சம்பந்தமாக காங்கோ மத்திய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு தாம் லியபோல்ட்வில்லிக்கு வருவதற்குத் தயாராக இருப்பதாக கடங்கா அதிபர் திரு. ஷோம்பே தெரிவித்துள்ளாராம்.

## மேதி உதவி நிதி

சென்னை, அக். 19

பீகார் வெள்ள கஷ்ட நிவாரண நிதிக்கு 1500 ருபாய் ‘செக்’ ஒன்றை பீகார் கவர்னருக்கு தமிழ் நாடு கவர்னர் திரு. மேதி அனுப்பிவைத்தார்.

# கைப்பற்றப்பட்ட ரூ.4 லட்சம் பெறுமதியான பொருட்கள்

## உரியவரிடம் திருப்பிக்கொடுக்க உத்தரவு

சாவகச்சேரி, வெள்ளி

நான்கு லட்சம் ரூபாய் பெறுமதியான கைக்கடிகாரங்கள் மருந்து வகைகள், க்ஷவர பிளேடுகள், மற்றும் பொருள்களையும் அவைகளின் சொந்தக்காரருக்குத் திருப்பிக் கொடுக்கும்படி சாவகச்சேரி நீதிபதி திரு ஏ. வைத்திலிங்கம் உத்தரவிட்டார்.

நாட்டுக்கு வெளியே கடத்துவதற்காக நான்கு லட்சம் பெறுமதியான இப் பொருட்களை வைத்திருந்ததாக இயக்கச்சியைச் சேர்ந்த பி. சிவசுப்பிரமணியம் என்பவர் மீது குற்றம் சாட்டி யாழ்ப்பாணம் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். வி. டி. நீஸ் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

சிவசுப்பிரமணியத்தை பிணையில் செல்ல நீதவான் அனுமதியளித்திருந்தார்.

பொலிசாரால் கைப்பற்றப்பட்ட பொருள்கள் தன்னுடையவையென்று சிவசுப்பிரமணியம் கோரியிருந்தார்.

திருவாளர்கள் கே. இரத்தினசிங்கம், என். நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. என். சத்தியேந்திரன் சிவசுப்பிரமணியம் சார்பில் ஆஜரானர்.

இன்ஸ்பெக்டர் நீஸ் சாட்சியமளிக்கையில் நாட்டைவிட்டு வெளியே கடத்துவதற்குத் தயாராக இப் பொருட்கள் சிவசுப்பிரமணியம் வீட்டில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டதென்றும் சுங்க சட்டப்படி இப் பொருட்கள் கைப்பற்றப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சுங்கச் சட்டத்தின் எந்த ஷரத்தின் கீழ் அவ்விதம் செய்யவேண்டுமென்று தெரிவிக்கும்படி இன்ஸ்பெக்டரை நீதவான் கேட்டார்.

பொலிஸ் கோஷ்டி சிவசுப்பிரமணியத்தின் வீட்டுக்குச் சென்றிருந்த சமயம் அவர் அங்கிருக்கவில்லையென்றும் அங்கு அப்பொழுதிருந்த அவரது மனைவி சின்னம்மா அப்பொருள்களுக்கு உரிமை கோரவில்லையென்றும் இன்ஸ்பெக்டர் நீஸ் தெரிவித்தார்.

சுங்கச் சட்டத்தின் கீழ் மாஜிஸ்ரேட் நீதிமன்றம் பொருள்களை கைப்பற்றுவதற்கு எந்தவித ஷரத்துமில்லையென்று வழக்கறிஞர் சத்தியேந்திரன் கூறினர். குற்றப்பிரிவுச் சட்டத்தின்படி பொருள்களின் சொந்தக்காரருக்கு அப்பொருள்களை நீதவான்கொடுக்க வேண்டுமென்று திரு. சத்தியேந்திரன் தெரிவித்தார்.

இதன்பின் கிராமத் தலைமைக்காரரை சாட்சியமளிக்க வழக்கறிஞர் அழைத்தார்.

28 வயதான திரு. கந்தையாவேலுப்பிள்ளையான இயக்கச்சி கிராமத் தலைமைக்காரர் சாட்சியமளிக்கையில் சிவசுப்பிரமணியத்தைத் தமக்குத் தெரியுமென்றும் சில வருடங்களாக அவர் இயக்கச்சியில் வசித்து வருகிருரென்றும் அவருடைய வீட்டிலேயே அவரது மனைவியும் பிள்ளைகளும் வசித்து வருகிருர்களென்றும் கூறினர்.

எங்கிருந்து அப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதோ அந்த இடத்துக்குரியவரான அவருக்கு அப்பொருள்கள் திருப்பிக்கொடுக்கப்பட அவருக்கு உரிமையுண்டு என்று வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார்.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அப்பொருள்கள் சிவசுப்பிரமணியத்திடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று நீதவான் உத்தரவிட்டார்.

சிவசுப்பிரமணியம் மீது வழக்குத் தொடர தாம் விரும்பவில்லையென்று இன்ஸ்பெக்டர் தெரிவித்ததன் பேரில் நீதிபதி அவரை விடுதலை செய்தார்.

## புளியங்கூடல் ஜனசமூக நிலையம்

புளியங்கூடல், வெள்ளி

புளியங்கூடல் ஜனசமூக நிலையத்தின் ஆண்டுவிழா திரு. வை. வடிவேலு தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது. தலைவர் தமது உரையில் ஜனசமூக நிலையங்களின் சேவைகளை எடுத்துரைத்தார்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வை. வடிவேலு, இணைக்காரியதரிசிகள்: திரு. க. பாலகணபதி, திரு. சு. விநாயகமூர்த்தி, தனதிகாரி: திரு. செ. நமசிவாயம்.

# யாழ்ப்பாணத்தில் சைக்கிள் திருட்டு

## மூவர் கைது; பல சைக்கிள் பகுதிகள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், சனி

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு புதிய சைக்கிளில் சென்ற ஒருவர் அங்கு கற்பூரம் வித்துக்கொண்டிருந்த கிழவருக்கு அருகில் சைக்கிளை வைத்து ‘குதிரைலாடன்’ போன்ற ‘பூட்லட’ நம்பி பூட்டிவிட்டு கற்பூரம் வாங்கிக் கொண்டு கோவிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்தார்.

‘சைக்கிளைக் காணவில்லை.’ அவர் பொலிஸில் புகார் செய்துள்ளார். இதுவரை தகவல் கிடைக்கவில்லை.

களவு போன சைக்கிள்கள் சம்பந்தமாக ‘வேட்டை’யிலிறங்கிய யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த சார்ஜண்ட் விக்கிரமநாயக்கா மூன்று பேரைக் கைது செய்துள்ளார். இத்துடன் யாழ்ப்பாணப் பகுதியில் களவாடப்பட்ட சைக்கிள் பகுதிகள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வேணுகோபால் நிற்குணநந்தன் என்ற மாணவன், மற்றும் அழகரத்தினம் என்பவரையும் அவர் கைது செய்து யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தார். பொலிஸாரின் புலன் விசாரணை முடிவடையும் வரை அவர்களை நீதவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## சென்பற்றிக்ஸ் கோஷ்டி வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாவது பிரிவுக் கோஷ்டிக்கும் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி இரண்டாவது பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஓர் சிநேகபூர்வமான உதைபந்தாட்டம் நடைபெற்றது.

இப்போட்டியில் சென்பற்றிக்ஸ் கோஷ்டி 1-0 கோல்களால் மகாஜனக் கல்லூரியைத் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. டி. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சென். ஜோன்ஸ் ஈட்டிய வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் சென். ஜோன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சென். ஜோன்ஸ் கோஷ்டி 3-0 கோல்களால் கொக்குவில் இந்துக்கல்லூரிக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

### மணி வாக்கு

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே.

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 5 உ (21-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## செனேட் சபை

செனேட் சபை தேர்தலைப் பற்றி இப்போது பொது மக்களின் கவனம் அதிகம் திரும்பியிருக்கிறதைப் பார்க்கையில் அச்சபை நீடித்திருக்க வேண்டுமென்றும், அது முக்கியமான ஒரு தேவையைப் பூர்த்திசெய்கிறதென்றும் அவர்கள் உணர்வதாகவே கொள்ளலாம். இன்றேல் இது குறித்து யாரும் லட்சியம் செய்திருக்கமாட்டார்கள்.

செனேட் சபை இலங்கைக்கு வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி, அதிக கருத்து வேற்றுமைகள் உண்டு. ஜனங்களால் நேர்முகமாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனப்பிரதிநிதிகள் சபை இருக்கையில் செனேட்சபை ஒன்று தேவையில்லை என்றும், வீண் செலவென்றும், முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவதாகுமென்றும் சிலரது கருத்து. ஆனல் ஜனப்பிரதிநிதிகள்சபை கட்சிக் கண்ணுடன் அவசரப்பட்டு கண்மூடித்தனமாக நிறைவேற்றிவிடக் கூடிய சட்டங்களை, தேசிய பொது நலக் கண்ணுடனும் தேர்தல் தயவு தாட்சண்யமெதுவுமின்றி, பட்சபாதமற்ற முறையில் புனராலோசனை செய்து தக்க திருத்தங்களைப் புகுத்தவே செனேட் சபை ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவிலும் கூட இதே நோக்கத்துடன்தான் ராஜ்ய சபை அமைக்கப்பெற்றது.

ஆனல் இங்கு எந்தநோக்கத்துடன் செனேட்சபை அமைக்கப்பெற்றதோ, அந்த நோக்கம் நிறைவேறவில்லை. இதற்கு மாறாக,ஜனப்பிரதிநிதிகள்சபை வகுப்பு, கட்சி நோக்கத்துடன் அவசரப்பட்டு நிறைவேற்றிய பல மசோதாக்களையும் அப்படியே செனேட் சபையும் நிறைவேற்றி, நாட்டில் தேசிய ஒற்றுமை குலையவும், அவசர நெருக்கடி ஏற்படவும் பொறுப்பாக இருந்திருக்கின்றது. சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்கவும், ஜனநாயகம் இங்கு ஓங்கி வளரவும் செய்ய செனேட் சபை தவறிவிட்டதென்றே கூறவேண்டும்.

காரணம், செனேட்சபையின் இப்போதைய அமைப்புமுறைதான். 30 பேர்களடங்கிய அச்சபையில் 15 ஸ்தானங்களுக்கு ஜனப்பிரதிநிதிகள் சபை, செனேட்டர்களைத் தெரிவு செய்வதென்றும், மற்ற 15 ஸ்தானங்களுக்கும் பிரதமரின் சிபார்சின்மீது பல துறைகளையும் சேர்ந்த அனுபவசாலிகளையும் அறிஞர்களையும் கவர்னர்ஜெனரல் நியமிக்க வேண்டுமென்று அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. ஆனல் கட்சி நன்மையை வளர்க்கும் முறையிலேயே செனேட் சபைக்கு மெம்பர்கள் தெரிவு செய்யப்பட்டும் நியமிக்கப்பட்டும் வந்துள்ளனரேயன்றி, பொதுப்படையான தேசிய நன்மைக்காகவோ ,ஜனநாயகம் இங்கு மேலான முறையில் நடைபெறுவதற்காகவோ அல்ல. இத்தவறு காரணமாக, அச் சபையால் நாட்டுக்கு எதிர்பார்த்த எவ்வித நன்மையுமில்லை.

இந்தப்பெரும் தவறை ஓரளவு நீக்கிக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இப்போது கிடைத்துள்ளது. மொத்தம் 10 ஸ்தானங்கள் இப்போது காலியாகியுள்ளன. இதில் ஐந்து நியமன ஸ்தானங்கள். மற்ற ஐந்தும் தேர்தல் ஸ்தானங்கள். அடுத்த வாரம் 27ந் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபை மெம்பர்கள் ஐவரைத் தெரிவு செய்வார்கள். ஐவர் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்படுவர். 30 பேரடங்கிய அச் சபையில் 4 தமிழர்கள் முன்னர் இருந்தனர். இப்போது இரண்டே பேர் தான் இருக்கின்றனர். நாட்டில் இரண்டாவது பெரிய சமூகமாகவுள்ள தமிழரின் ஜனத்தொகை விதாசாரப்படி பார்த்தாலும் அச் சபையில் எட்டு அல்லது ஒன்பது தமிழ் மெம்பர்களாவது இருக்க வேண்டும். பத்து லட்சம் இந்திய வம்சாவளியினருக்கும், நாம் இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், ஒரு பிரதிநிதிகூட இல்லை. இதனல் சிறுபான்மையோரின் நல உரிமைகளுக்கு தக்க பாதுகாபபு இல்லாமற் போய்விட்டது. இந்நிலை மாறி, தேசிய ஒற்றுமையும், முன்னேற்றமும் ஏற்பட்டு, ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமானல், சிறுபான்மை சமூகத்துக்கு நியாயமான பிரதிநிதித்துவமாவது அளித்து அவர்களது நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும்பெற வேண்டும். இவ்வகையில், இப்போதுள்ள குறையை ஓரளவாவது தீர்க்க சிறப்பாக அரசாங்கத்துக்கும், கவர்னர் ஜெனரலுக்கும் இது நல்ல சந்தர்ப்பமாகும்.

# யாழ்ப்பாணத்தில் கலையார்வம்

## பிரதேச கலைமன்றத்தின் ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

"யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றம் ஆரம்பிக்கப்பெற்று இன்றுடன் ஓராண்டு நிறைவேறுகின்றது. இக்கால எல்லைக்குள் இம்மன்றம் கலை வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் அளப்பில. கலைக்கு இம்மன்றம் புத்துயிர் அளித்திருப்பதுடன் சிற்ப ஓவியத்துறைகளிலும் குறிப்பிடத் தக்க ஆர்வத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தியுள்ளது."

இவ்வாறு மன்றத்தின் போஷகர் கலைப்புலவர் க. நவரத்தினம் நேற்று நடைபெற்ற ஆண்டுவிழாவின்போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண பிரதேச கலைமன்ற சிற்ப ஓவியப் பகுதி முதலாவது ஆண்டுவிழா வண்ணார்பண்ணை பிரப்பங்குள வீதியிலுள்ள கலைமன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் தலைமைவகித்தார். அவர் தமது உரையிற் குறிப்பிட்டதாவது:

"இம்மன்றம் யாழ்ப்பாணத்திலே கலை ஆர்வத்துக்கு புத்துணர்ச்சி ஊட்டி வருவதுடன் இலங்கையிலும் சொந்தக் கலையும் கலாசாரமும் சிறப்படைவதற்கு உதவி புரியுமென்பது எனது நம்பிக்கை.

அரசாங்கம் இம்மன்றத்துக்குப் போதிய ஆதரவுஅளித்துவருகின்றது. இங்கு பயிலும் மாணவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது கலைத்திறனை உலகறியச் செய்வார்கள் என்றும் நம்புகின்றேன்.

இக்காட்சியைப் பார்வையிட்ட இணைப்பு அதிகாரி கேணல் யு. ஆர். உடுகம (தலைவர் யாழ்ப்பாணம் பிரதேச கலைமன்றம்) அங்கு பார்வைக்கு வைக்கப்பெற்ற சித்திரங்களையும் சிற்பங்களையும் ஓவியங்களையும் மிகுந்த ஆர்வத்துடன் பார்வையிட்டார்.

ஆசிரியர் திரு. செ. சிவப்பிரகாசம் உருவாக்கிய சிவ-பார்வதி, புத்தர் விக்கிரகங்களை அவர் பெரிதும் பாராட்டி ஆசிரியரின் கலைத்திறனை வாழ்த்தினர்.

மாணவர்களின் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த சிற்பங்களும், அவர்கள் உருவாக்கிய நூதனப் பொருள்களும் கவர்ச்சியானமுறையில் அமைந்துள்ளன.

சிறுவர்களின் சித்திரங்கள் தரமாக இருப்பதுடன் வெளிநாட்டினரும் புகழக்கூடியமுறையில் அவர்கள் தங்கள் திறமையை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

பெலை களின் கலையார்வத்தை எடுத்துக்காட்டும் நூதன சித்திரப்பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பெற்றுள்ளன.

அன்று இரவு திரு. ராம். குமாரசுவாமி இன்னிசை விருந்தளித்தார்.

மாணவர் மன்றத் தலைவர் திரு. ஜோசப் அனைவருக்கும் நன்றி கூறினர். இக்கலைக்காட்சி 21-10-61 சனிக்கிழமையும்நடைபெறும்.

## 'கவிஞர்களுக்கு காலகதியில் பதவிகள் கிடைக்கும்'

தெல்லிப்பழை, வெள்ளி

"இசைக்கலையில் புதிய மறுமலர்ச்சி காணப்படுவது வரவேற்கத்தக்கது. தற்போது அரசாங்கம் பாடசாலைகளை எடுத்தபின்னர்பலருக்கும் இடமளிக்கவேண்டிய சந்தர்ப்பம் இருக்கின்றமையால் இந்தக் கலைஞர்களுக்குக் காலகதியில் பதவிகள் கிடைக்கும்."

இவ்வாறு உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் கீரிமலைச் சிவன்கோயிலில் தெல்லிப்பழை கலாரஞ்சன சபாவின் ஆதரவில் நிகழ்ந்த சங்கீதபூஷணம் செல்வநாகம்மா கதிர்காமரின் இசை அரங்கேற்றத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

இரத்தினக் கம்பளம்

## கலை வளர்ச்சி

பதுமன்

பண்டைத் தமிழர் பண்பாட்டை வளர்ப்பதற்கும் அதனைப் பாதுகாப்பதற்கும் தமிழ் பேசும் இனம் ஒன்று சேர்ந்து உழைப்பது அவசியமென யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராசா சமீபத்தில் நடை பெற்ற நடன விழா ஒன்றிற் குறிப்பிட்டிருந்தார். வேறு பல துறைகளில் தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டு உழைக்கத் தவறினலும் தமிழர் பண்பாட்டைப் பேணி வளர்ப்பதில் அனைவரும் முன்வந்து உழைக்கவேண்டுமென மேயர் கருதுவதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

மேயர் இப்படிப் பேசியிருப்பதைப் பத்திரிகைகளிற் படித்த போது யோகி சுத்தானந்த பாரதியாரின் சில வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. சுவாமி கூறுவதையுங் கேளுங்கள்:

"கல்வி, கலை, கவிதை, இசை, நாடகம் அனைத்திலும் தமிழ் சிறப்புற்று, உலகில் மதிப்புறவேண்டும். தமிழ்க் கலை எங்கணும் கதிர் விரிந்து பரவ வேண்டும். சாதிச் சண்டை, சமயப் பெரும்போர், வாதுவழக்கு, வேற்றுமை பொறுமை, சிறுமை, அகந்தை, வறுமை, மடமை, சோம்பல் முதலியவற்றை ஒழிப்போம். தடைகளைத் தகர்த்து முன்னேறுவேம்".

இந்தத் தமிழ் உணர்ச்சி தமிழ் பேசும் மக்களிடையே ஏற்பட வேண்டுமென்று யாழ்ப்பாணம் மேயர் தக்க சமயத்தில் நினைவூட்டியிருக்கின்றார். ஆம், தமிழ்ப்பண்பை வளர்ப்பதில் யார்தான் ஒன்றுசேர மறுப்பார்கள்.

### பிரதேச கலைமன்றம்

தமிழ் சிறப்புற்று உலகில் மதிப்புற வேண்டுமெனத் தமிழ் மக்கள் ஆசைப்படும் இந்நாட்களில் யாழ்ப்பாணம் பிரதேச கலைமன்றம் தமிழ்க் கலை வளர்ச்சிக்காக ஆற்றி வரும் பணிகள் பெரிதும் பாராட்டற்குரியன.

இம் மன்றம் விஜயதசமித் தினத்தன்று முதலாவது ஆண்டு விழாவைத் தக்க முறையிற் கொண்டாடிற்று. வண்ணார்பண்ணை பிரப்பங்குள வீதியிலுள்ள கலைமன்ற மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில், மன்றத்து மாணவர்களால் வரையப்பெற்ற ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பெற்றிருந்தன. சிற்பங்களின் அற்புதமான அமைப்பும், மட் பாண்டங்களில் வரையப்பெற்ற சித்திரங்களும் கவர்ச்சிகரமாகவிருந்தன. கடற் சிற்பிகளைக் கொண்டு செய்யப்பெற்ற நூதனமான பொருள்கள் பலரின் பாராட்டுகளைப் பெற்றன. ஆசிரியர் திரு. செ. சிவப்பிரகாசத்தின் கலைப்பணி சிறந்து விளங்குவதற்கு மன்றம் துணைபுரியுமென எதிர்பார்க்கலாம். கலைப்புலவர் க நவரத்தினம் மன்றத்தின் போஷகராக விளங்கி அரும் பணியாற்றி வருகின்றார். பொதுமக்களின் ஆதரவுடன் மன்றம் மேலும் வளர்ச்சியுறுமென்பதற்கு ஐயமில்லை.

### எழுத்தாளன் பொறுப்பு

கலையாக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இலக்கிய மகாநாட்டைப் பற்றி கூறுவது பொருத்தமானது.

இம் மகாநாட்டிற் சிறப்புச் சொற்பொழிவாற்றிய ஆசிரியர் நாரண-துரைக்கண்ணன் எழுத்தாளர் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமெனக் கூறியிருந்தார். எழுத்தாளர் பழமைக்கும், புதுமைக்கும், பொன்னன இடையிலே நின்று பணிபுரிய வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட இப்பெரியார் தமது பேச்சில் மற்றுமோர் உண்மையையும் நினைவூட்டியிருந்தார். எழுத்தாளர்கள் அனைவரும் அதனை அறிந்துகொள்வது நன்று. "எழுத்தை வெறும் பொழுது போக்காய் மட்டும் கொள்ளாமல் சமுதாயத்தின் புரட்சிகரமான மாறுதல்களுக்கெல்லாம் எழுத்தே காரணம் என்பதை உணர்ந்து எழுத்தாளன் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்".

## கந்தரோடை சனசமூக நிலையம்

சுன்னகம், வெள்ளி

கந்தரோடை சனசமூக நிலையத்தில் கலைமகள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவின் மகத்துவத்தைப் பற்றி ஆசிரியர் வி. கந்தசாமி பேசினர்.

## வியன்னவில் சுகர்னே

ஜாகர்த்தா, அக். 19

இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்னே வைத்திய சிகிச்சை பெறுவதற்காக ஜாகர்த்தாவிலிருந்து வியன்னவுக்குப் பிரயாணமானர்.

## ஐயாறன் எழுதுவது

எட்டு மாதங்களுக்குப்பிறகு தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் முந்தாநாள் பார்லிமெண்ட் சபைக்கு வந்தபோது அரசாங்கக் கட்சியினருள்ளிட்டு பலரும் கரகோஷம் செய்து சந்தோஷத்துடன் அவர்களை வரவேற்றதாக கொழும்பிலிருந்து கிடைத்த தந்திச் செய்தியைக் கண்டதும் எனக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

இப்போதுள்ள அரசாங்கம் பதவிக்கு வந்ததற்கு தமிழரசுக்கட்சியினரே பெரிதும் காரணமாகும். யு. என். பி. அரசாங்கத்தின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அக்கட்சி எதிர்த்திருந்தால், அல்லது நடுநிலைமை வகித்திருந்தால் அத்தீர்மானம் தோற்று இலங்கையின் அரசியல் போக்கே வேறு விதமாக இருந்திருக்கலாம். சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்திருக்க முடியாது.

இந்த நன்றியை சுதந்திரக் கட்சியில் ஒருசிலராவது நினைவில் வைத்திருக்கலாம்.

* * *

இடையிலே பலபல காரியங்கள் நடந்துள்ளன ஜனநாயகம் நமக்குப் புதிது. பல தவறுகள் நடப்பது சகஜம். மகாத்மா, நேருஜி போன்ற தலைவர்களை ஈன்ற இந்தியாவிலேயே எவ்வளவோ சங்கடங்கள் ஏற்படுவதைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். அப்படியிருக்கையில் நம் இலங்கையில் தவறுகளும், சங்கடங்களும் ஏற்படுவதில் வியப்பில்லை.

நடந்துபோன காரியங்களைக் கொண்டு, தக்க பாடம் கற்று இனியும் அவ்வித தவறுகளைச் செய்யாமல், ஒருவரை ஒருவர் மதித்து ஒத்துழைத்தால், நமது அரசியல் சங்கடங்கள் எல்லாம் தீர்ந்து, இங்கு ஜனநாயகம் வெற்றிபெற்று எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் போல் வாழலாம்.

அரசியல் சீர்திருத்த சபையும் அமைக்கப்பட இருக்கிறது. எஸ். ஜே. வியும் இலங்கைக்குக் கப்பலேறிவிட்டார். சில நாட்களில் இங்கு வந்துவிடலாம். நமக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நோய் தீரவும், நோய்க்கான காரணங்களை நீக்கி, சுபிட்சத்துடன் வாழவும், அரசியல் திருத்தசபை வழி செய்ய வேண்டும். ஜனநாயகத்தின் வெற்றி சிறுபான்மையினர் திருப்தியுடன் பயமின்றி சரிநிகர் சமானமாக வாழ்வதில்தான் அடங்கியுள்ளது.

* * *

நேற்று முன்தினம் ஒரு கோவிலுக்குப் போயிருந்தேன். மகிஷாசுரன் போரைப் பார்க்க நல்ல கூட்டம். "இதோ இதோ இவன்தான் மகிஷாசுரன். அவனையும் அவன் குடும்பத்தையும் இதோ பாருங்கள்." என்று ஒருவர். இரண்டு போட்டோ படங்களை எடுத்து பலரிடம் காட்டிவந்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. "இவதான் மகிஷாசுரனின் மனைவி. இவர்கள் குழந்தைகள்" என்று சொன்னர்.

பின்னல் இருந்த ஓர் அன்பர், "இது மகிஷாசுரன் அல்ல மதுஅரக்கன்" என்று கூறியதும் தான் விஷயம் புரிந்தது. புனிதமான ஒரு விழாவிலே "மதுஅரக்கன்" ஓர் அன்பருக்குள் புகுந்து தாண்டவமாடியதைக் காண மிக வெட்கமாக இருந்தது. மகிஷாசுரனை எப்போதோ கொன்றுவிட்டாள் பராசக்தி. ஆனல் இப்போது மதுஅரக்கனிடமிருந்து மக்களை அந்த அம்மை எப்படி, எப்போது காக்கப் போகின்ருளோ?

# தாமரவல்லி தோட்டததைப் போலவே நடக்கும்

## தோட்டத்துரை இப்படியும் சொன்னராம்

### இலட்சுமி தோட்ட விசாரணையில் சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

**இலட்சுமித் தோட்டத்தில் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்காவிட்டால் தாமரவல்லித் தோட்டத்தில் எடுத்த நடவடிக்கைகளையே எடுக்க நேரிடும் என்று தோட்டத்துரை ஹார்லி தம்மிடம் கூறியதாக ராமையா என்பவர் நேற்று இலட்சுமிதோட்ட விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறினர்.**

இலட்சுமித் தோட்ட விசாரணை நேற்று மீண்டும் பகிரங்மாக விசாரணை செய்யப்பட்டது. நேற்றைய விசாரணையின் போது கே. இராமையா என்ற சாட்சியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஆஜரான திரு. எம். திருச்செல்வம் முதலில் விசாரணை செய்தார். சாட்சி இராமையா தமது சாட்சியத்தில் கூறியதாவது:

நான் இலங்கையின் பதிவுப் பிரஜை. நான் இலங்கையிலேயே பிறந்தவன். இலங்கையை எனது நாடாகவே கருதுகிறேன். 1934-ம் ஆண்டில் எனக்கு 15 வயதாக இருக்கும் பொழுதே நான் இலவசுமித் தோட்டத்தில் வேலை செய்ய ஆரம்பித்தேன். எனது பெற்ருேர்களும் இலட்சுமித் தோட்டதில் வேலைசெய்துவந்தனர். 1934-ம் ஆண்டிலிருந்து 1940-ம் ஆண்டுவரை சிறிது காலத்துக்கு நான் இலட்சுமித் தோட்டத்தைவிட்டு வெளியேறியிருந்தேன். 1940-ம் ஆண்டில் மீண்டும் அங்கு சென்றேன். அப்பொழுது தொடக்கம் என்னை வேலைநீக்கம் செய்யும் வரை நான் அங்கு வேலை செய்துவந்தேன். இச்சமயத்தில் அங்கு இலங்கை இந்தியர் காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு தொழிற்சங்கம் இருந்தது. நூற்றுக்கு நூ: வீதமான தொழிலாளர்கள். இச்சங்கத்தில் அங்கம் வகித்தனர். நிர்வாகமும் இதை எதிர்த்ததாகத் தெரியவில்லை. அங்கு கூட்டங்கள் நடைபெறுவதுண்டு- வருடாந்தக் கூட்டம் பெரிய எடுப்பில் நடைபெறுவதுண்டு. வருடாந்தக் கூட்டம் சிலசமயம் காந்தி ஜயந்தி தினத்துடன் ஒன்ருக வருவதுமுண்டு. இக்கொண்டாட்டத்துக்கு தோட்டநிர்வாகமும் நன்கொடையளிப்பதுண்டு. 1941-ம் ஆண்டிலிருந்து நான் பொதுக்காரியதரிசியாக இருந்தேன். இலட்சுமித் தோட்டத்திலிருந்து சுமார் ஆறுமைல் தூரத்தில் தாமரைவல்லித் தோட்டம் இருக்கிறது. 1948-ம் ஆண்டின் பிற்பகுதியில் இலட்சுமித் தோட்டத்துரையாக திரு. மோர்ஸ்லி கடமையாறிற்ஞர். அந்தநேரம் திரு. ஹார்லி தாமரைவல்லித்தோட்டத்துரையாக இருந்தார். திரு. ஹார்லி 1949-ம் ஆண்டில் இலட்சுமித் தோட்டத்துரையாக வந்தார்.

#### தொழிற்சங்கம் அவருக்குப் பிடிக்காது

ஒரு சமயம் இதற்குமுன்னர் தாமரைவல்லித் தோட்ட டீமேக்கர்' எனக்கு ஆளனுப்பியிருந்தார். அவர், அப்போது தாமரைவல்லித் தோட்டத்துரையாக இருந்த திரு. ஹார்லி எமது தோட்டத்துக்கு வர இருப்பதாகவும், திரு. ஹார்லிக்கு தொழிற்சங்கங்கள் பிடிக்காதென்றும் கூறினர். தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் யாவற்றுக்கும் முற்றுப்புள்ளி போடுவதற்கு என்னல் இயன்றதெல்லா வற்றையும் செய்யும்படி டீமேக்கர் என்னைக் கேட்டுக்கொண்டார். அவ்வாறு செய்தேன் என்ருல் அதற்குப்பதில் எனக்கு உத்தியோக உயர்வு வழங்குவதாக அவர் கூறியிருந்தார். என்னைத் தோட்டத்தில் கணக்கப்பிள்ளையாக அமர்த்துவதாக அவர் கூறியிருந்தார். இவ்வாறு பேசிக்கொண்டு அவரது தோட்டத்துரையின் பங்களாவுக்குச் சென்றுகொண்டிருந்தோம். நான் யூனியன் பொதுக்காரியதரிசியாக இருந்தது 'டீமேக்கருக்கு'த் தெரிந்திருந்தது. ஹார்லித் துரைக்கும் இது தெரிந்திருந்தது என நான் நினைக்கின்றேன். திரு. ஹார்லியை நான் வராந்தாவில் சந்தித்தேன். தொழிற்சங்கம் என்ருல் தமக்குப் பிடிப்பதில்லை என்று ஹார்லித்துரை கூறினர். தொழிற்சங்கத்துக்கு என்னை முற்றுப்புள்ளிவைக்குமாறும் தாம் அதற்கு பிரதியுபகாரம் செய்வதாகவும் திரு. ஹார்லி என்னிடம் கூறினர். தொழிற்சங்கங்களினல் ஒரு தீங்கும் நேரிடாது என நான் சொன்னேன். இதர தோட்டங்களிலும் தொழிற்சங்கங்கள் இருக்கின்றன என்று நான் கூறினேன். தொழிற்சங்கத்தில் 750 தொளிலாளர்கள் அங்கத்தவர்களாக இருக்கிருர்கள் என்றும், அவர்கள் தொழிற்சங்கத்துக்கு விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்கிருர்கள் என்றும் அவருக்குக் கூறினேன். தோட்டத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள் நிறுத்தப்படாவிட்டால், தாமரைவல்லித் தோட்டத்தில் செய்தது போலவே தாம் இலட்சுமித் தோட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்போவதாகத் திரு. ஹார்லி தெரிவித்தார்.

#### விறகு பொறுக்குவதாக குற்றம் சாட்டினர்

திரு. ஹார்லி இலட்சுமித் தோட்டத்துக்கு வந்தபின், ஒருநாள் நான் பசளையிட்டுக் கொண்டிருந்தபோது அவர் என்னிடம் வந்தார். கணக்கப்பிள்ளையும் கங்காணியும் மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்கள். தேயிலைச் செடிகளுக்கிடையே வாழைமரக்கிளைகள் சில விழுந்து கிடந்தன. பசளை இடுவதற்கு இவை எனக்குத் தடையாக இருந்தன. அவற்றை எடுத்து நான் வேறு இடத்தில் போட்டேன். இதைப்பார்த்த ஹார்லி, நான் எனது வேலையில் கவனம் செலுத்தாது விறகு பொறுக்குவதாக என்னைக் குற்றஞ்சாட்டினர். நான், எனது வேலையைச் செய்வதாகக் கூறிக்கொண்டே வாகைச்கொப்புகளை வேறு இடத்துக்கு அகற்றிக் கொண்டிருந்தேன். நான் இவ்வாறு செய்வதைக் கங்காணியும் கணக்கப்பிள்ளையும் கண்டார்கள். ஆனல் என்னைக் குற்றஞ்சாட்டவில்லை. மரக்கொப்புக்களை நீக்காது விட்டால் நான் வேலைசெய்திருக்க முடியாது.

ஹார்லி என்னைக் கந்தோருக்கு வருமாறு கேட்டார். நான் பின்னேரம் மூன்று மணிக்குக் கந்தோர் சென்றேன். நான் விறகு பொறுக்கிக் கொண்டிருந்ததாகவும் வேலையில் கவனம் செலுத்தவில்லையென்றும், ஏன் அவ்வாறு செய்தேன் என்றும் ஹார்லி என்னைக் கேட்டார். நான் வேலை செய்வதற்குக் கொப்புகள் தடையாக இருந்தனவென்றும் அதனலேயே அவற்றை நீக்கிக்கொண்டிருந்தேன் என்றும் நான் கூறினேன். என்னை வேலையிலிருந்து நீக்குமாறும், அதற்குத் தாம் ஒரு மாத கால முன்னறிவித்தல் கொடுப்பதாகவும் அவர் கூறிக்கொண்டு 'நோட்டீஸை' எழுதி உடனேயே என்னிடம் கொடுத்தார். நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பதில் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் மாவட்டக் காரியாலயத்தில் இது பற்றி அறிவித்தேன்."

தோட்ட நிருவாகிகள் சார்பில் திரு. டி எஸ். ஜயவிக்ரமா ராமையாவைக் குறுக்கு விசாரணை செய்தார்.

பார்: இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு நீ உண்மையுள்ளவனக இருந்தாயா?

சாட்சி: ஆம்.

பார்: நீ தொழிற் சங்கக் காரியதரிசி என்பது எல்லாருக்கும் தெரிந்திருந்ததல்லவா?

சாட்சி: ஆம்.

திரு. ஜயவிக்ரமா தொடர்ந்தும் விசாரணை நடத்தியபோது சாட்சி கூறியதாவது:

தோட்டத்திலுள்ள காங்கிரஸ் யூனியனைத் திரு. ஹார்லி கலைக்கும்படி என்னிடம் கேட்டுக்கொண்டது பற்றி காங்கிரஸ் கமிட்டிக்கு நான் கூறினேன். தோட்டத்திலிருந்து ஹார்லி என்னை வேலை நீக்கம் செய்துவிட்டார். வேலை செய்யாது விறகு பொறுக்கினேன் என்று கூறி என்னை வேலையிலிருந்து விலக்கினர். தொழிற் சங்க முயற்சிகள் தொடர்ந்தும் நடைபெற்று வந்தால் தாமவல்லித் தோட்டத்தில் நடைபெற்ற சம்பவமே இங்கும் நடைபெறும் என ஹார்லி கூறினர்.

பார்: தாமரவல்லித் தோட்டத்தில் என்ன நடைபெற்றது?

சாட்சி: துப்பாக்கிப்பிரயோக சம்பவம் ஒன்று அங்கு நடைபெற்றது.

ராமையா தொடர்ந்தும் சாட்சியம் கூறுகையில் தொழிற் சங்கம் தொழிலாளருக்கு பிரயோசனமான வேலைகளை செய்துவந்தது என்று கூறினர். தொழிலாளர் துன்புற்றிருக்கும் சமயங்களில் தொழிற் சங்கம் பெரிதும் உதவிவந்தது என அவர் கூறினர்.

அடுத்தபடியாகச் சாட்சியை முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சாம் விஜயசிங்கர் குறுக்கு விசாரணை செய்தார். திரு. விஜயசிங்காவின் விசாரணையின் போது சாட்சி கூறியதாவது:

நான் தோட்டத்தை விட்டுச் சென்ற பின்னர் 1952ல் எனது தாயார் இறந்தார். 1956ல் எனது தந்தையார் இறந்தார். எல்லாம் இந்த இரக்கங்கெட்ட, ஹார்லி என்பவரால் தான். எனது பெற்ருேர்கள் இறக்குமுன்னர் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை என்னல் செய்யமுடியவில்லை.

அடுத்தபடியாக ஹப்புத்தளைத் தொழிலாளி எஸ். கண்ணையா விசாரணை செய்யப்பட்டார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் திரு. திருச்செல்வம் விசாரணை செய்தார். திரு. திருச்செல்வத்தினல் ஏ. பி. பாக்கியம் என்பவரும் விசாரணைசெய்யப்பட்டார். வேறு சாட்சிகளும் தொடர்ந்து விசாரணைசெய்யப்படவிருக்கிருர்கள்.

# ஈ.எம்.வி.-ஆர்.ஜி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மசோதா விடப்பட வேண்டுமென்று திரு. லெஸ்லி குணவர்த்தன யோசனை கூறினர்.

#### டட்லியின் கருத்து

எதிர்க் கட்சித் தலைவரும் யு. என் பி.த் தலைவருமான திரு. டட்லி சேனனயக்கா பேசுகையில் மூலச் சட்டத்துக்கு 'டிமிக்கி' கொடுக்கக் கூடிய வழி வகைகளில்லாமல் அச் சட்டத்தை உறுதியாக்குவதற்கு சில திருத்தங்கள் அவசியமென்பதை தாம் ஒப்புக்கொள்வதாக கூறினர். திரு. டட்லி மேலும் கூறியதாவது:-

சட்டத்தை இந்த மாதிரி உறுதிப்படுத்துவதின் மூலம் நாட்டு மக்கள் கஷ்டத்துக்குள்ளாக வழி செய்துவிடக் கூடாது.

சட்ட விரோதக் குடியேற்றம் இலங்கைக்கு ஒரு மோசமான பிரச்சினையாகவே தொடர்ந்திருந்து வருகிறது. சட்ட விரோதக் குடியேற்றம் இப்பொழுது அதிக லாபம் தரும் தொழிலாகிவிட்டது.

#### இலங்கையரின் பெயர்கள்

இந்தத் திருத்த மசோதா இதை அமுல் நடத்துபவர்களினல் துஷ்பிரயோகம் செய்வதற்கு வழி வகுக்கக்கூடும். தமிழ் முஸ்லிம் பெயர்களினல் கஷ்டங்கள் விளையக் கூடும். இலங்கையர்களுக்கும் அதே பெயர்கள் உண்டு.

ஒருவர் பிணையில் விடப்பட வேண்டுமா இல்லையாவென்பதை முடிவு செய்யும் பொறுப்பு நீதிபரிபாலன அதிகாரிகளிடம் விடவேண்டும். பிணையில் விடுவதற்குத் தகுதியில்லாத எவரையும் பிணையில் செல்ல அவர் அனுமதிக்கமாட்டார்.

திரு. டட்லி மேலும் பேசுகையில் கொள்கையளவில் இத்திருத்த மசோதாவை யு. என். பி. ஆதரிக்கிறதென்று கூறின்ர்.

#### வயல்களில் கள்ளத்தோணிகள்

தம்பதெனியா எம். பி திரு ஆர். ஜி. சேனநாயக்கா பேசுகையில் பின்வருமாறு கூறினர்:

அறுவடை காலத்தில் ஆயிரக்கணக்கில் இலங்கைக்கு வந்து சேரும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள்தான் வட பகுதியில் நெல் வயல்களில் வேலை செய்பவர்கள். இந்த சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் மீன்பிடித் தொழிலும் வேலை செய்கிருர்கள். அவர்கள் இலங்கையில் பணத்தைச் சம்பாதித்து இந்தியாவுககுக் கொண்டு சென்றுவிடுகின்றனர். சிலர் இலங்கையில் தங்கி விடுகின்றனர்.

இந்த அரசாங்கத்தினல் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

#### சமஷ்டிக்கட்சிமீது சீற்றம்

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தாங்கள் எதிர்ப்பதாக வடக்கிலுள்ள அரசியல் கட்சிகள் கூறிக் கொள்கின்றன. என்ருலும் சட்டவிரோதக் குடியேற்றக்காரரைக் கைது செய்வதில் சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் உதவி புரிந்ததாக எந்த சம்பவமும் கிடையாது.

இந்தத் திருத்த மசோதாவின் விவாதத்தில் சமஷ்டிக் கட்சி எம். பி.க்கள் உணர்ச்சியைக் கொட்டிப் பேசினர். சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு இவர்கள் உடந்தையாக இருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

டாக்டர் நாகநாதன் முழுப் பொய் அதை வாபஸ் பெறும்.

#### அவசரகாலம் என்ற போர்வை

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

இந்த நாட்டில் பரம்பரையாக வாழ்ந்து வரும் மக்களை அதிலும் பிரபலமாக வாழ்ந்த பலரை துன்புறுத்துவதற்கு சட்டவிரோதத் தடுப்பு நடவடிக்கை என்ற சாட்டில் அவசரகாலம் என்ற போர்வையை அரசாங்கம் உபயோகிக்கிறது.

சட்டவிரோதக் குடியேற்றக் காரர் என்ற சாட்டில் பெண்கள் பலர் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்ட சம்பவங்கள் பல.

ராணுவம் கடமையாற்ற வேண்டுமென்று தீர்மானிக்கும் அதிகாரத்தை மந்திரிக்குக் கொடுக்கும் ஒரு விபத்து இந்த மசோதாவிலிருக்கிறது.

#### வடக்கு, கிழக்கில் ராணுவம் இருக்கும்

எனவே அவசரகால நிலை நீக்கப்பட்டாலும் அல்லது அதற்கு பின்னரும் கூட இந்த மசோதா சட்டமாகியதும் வடக்கு கிழக்கு மகாணங்களில் இராணுவம் தொடர்ந்து இருந்து அப்பகுதி மக்களை துன்புறுத்த இச்சட்டம் வழி செய்யும்.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பது தான் அரசாங்கத்தின் உண்மையான நோக்கமாகத் தெரியவில்லை.

சட்டவிரோதக் குடியேற்றக் காரருக்கு உதவி செய்ததாகவும் உடந்தையாக இருந்ததாகவும் குற்றஞ்சாட்டி மன்னரில் 23 பேர் கைது செய்யப்பட்டு இன்னும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆனல் சட்ட விரோதமாகக் குடியேறுபவர்கள் தென்னிலங்கையில் வேலைக்கு அமர்ந்து விடுகிருர்கள்.

கசிப்பு மன்னர்களிடம்' ஆயிரக்கணக்கான சட்டவிரோதக் குடியேற்றக் காரர்கள் வேலைக்கிருக்கிருர்கள்: ஆனல் சட்ட விரோதக் குடியேற்றக் காரர்களுக்கு உதவி புரிந்ததாகக் குற்றம்சாட்டி தம்பிராஜாவும், சபாரத்தினமும் இன்னமும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

'கசிப்பு' மன்னர்களும், தென்னந்தோட்ட முதலாளிமார்களும் தான் உண்மையில் காவலில் வைக்கப்பட வேண்டியவர்கள்.

#### ஐக்கிய இலங்கை உருவாக வழி

ஐக்கிய இலங்கையை உருவாக்க உண்மையிலேயே அரசாங்கம் விரும்புவதானல், தமிழ் சமுதாயத்தை துன்புறுத்துவதனலேயோ, இராணுவ கொடுங்கோன்மையாலோ துப்பாக்கி முனையினலேயோ சிங்களத்தைத் தமிழர்களின் தொண்டைக்குள் திணிக்க முயற்சி செய்வதில் அர்த்தமேயில்லை.

தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான உரிமைகளையும் கோரிக்கைகளையும் வழங்குவதன் மூலமே ஐக்கிய இலங்கையை உருவாக்க முடியும்.

### ஈராக் நடவடிக்கை

பாக்தாத், அக். 20

ஈராக் எண்ணெய்க் கம்பனிகள் சம்பந்தமாக ஈராக் அரசாங்கம் கடும் கட்டுப்பாடுகள் விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. சலுகைகளும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன.

### ரயில் விபத்தில் 27 பேர் பலி

#### கல்கத்தாவுக்கு அருகில் சம்பவம்

கல்கத்தா, அக். 20

கல்கத்தாவுக்குச் சமீபத்தில் ஹௌடாதாட்டா ரயில் பாதையில் இன்று அதிகாலை 2-30 மணிக்கு ஏற்பட்ட ரயில் விபத்தொன்றில் 27 பேர் மாண்டனர். 105 பேர் காயமடைந்தனர்.

உதவி அளிப்பதற்காக விசேஷ ரயிலில் டாக்டர்கள் அனுப்பப்பட்டனர். விபத்து பற்றி விசாரணை நடைபெறுகிறது.



# மாணவர் மலர்



## மரவள்ளிக்கிழங்கு

மரவள்ளிக்கிழங்கின் பெருமையை உலகம் இன்னும் நன்ருக உணரவில்லை என்ருல் அது மிகையாகாது. தென் அமெரிக்காவைச் சேர்ந்த பிரேசில் நாட்டில்தான் மரவள்ளிக்கிழங்கு அதிகமாக உண்டாக்கப்படுகிறது. எங்கள்நாட்டிலும் மரவள்ளிக்கிழங்குஉண்டாக்கப்படுகிறதென்பதை நீங்கள் அறிவீர்கள் தானே

யுத்த காலத்தின்போது ஏற்படும் உணவுப்பஞ்சத்தைப் போக்குவதற்காகத்தான் மரவள்ளிக்கிழங்கு பல நாடுகளிலும் உண்டாக்கப்பட்டது. அப்படியாளுல் பழைய காலத்து மக்கள் இக்கிழங்கைப் பற்றித் தெரிந்திருக்கமாட்டார்களா என்றுதானே கேட்கிறீர்கள்? அதுதான் இல்லை. இக்கிழங்கு பழங்குடி மக்களால் உண்டாக்கப்பட்டு அவர்கள் இதனைத் தங்கள் உணவுப் பொருட்களாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். பல வருட ஆராய்ச்சிக்குப்பின் மரவள்ளிக்கிழங்கு அதிகமாக உண்டாக்கப்பட்டுவரும் பிரேசிலில் தான் முதலில் தோன்றியிருக்கவேண்டுமென்று கண்டுபிடிக்கப்பட்டது.

பிரேசிலில் தோன்றிய மரவள்ளிக்கிழங்கு இலங்கைக்கு எப்படி வந்தது? போர்த்துக்கீசியர் 17 ம் நூற்ருண்டில் இந்தியாவிற்கு வந்தபோது தம்முடன் இதனையும் கொண்டு வந்து உண்டாக்கினர். பிறகு இந்தியாவிலிருந்து இது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. இம் மரவள்ளிக்கிழங்கு பொதுவாக ஒரு மரம்போன்று வளரும். அதற்குப் பல கிளைகள் உண்டு. அதன் இலைகளோ ஐந்து அல்லது ஒன்பது கூறுகளாகப் பிரிந்துள்ளன.

இதன் தண்டுகளிலிருந்து வளரும் வேர்களில் கிழங்கு உண்டாகின்றன. இவ்வேர்கள் இடம் மாறி வளரும். பொதுவாக ஒரு தடியில் 20 முதல் 25 ருத்தல் நிறையுள்ள கிழங்குகளைச் சேகரிக்கலாம். கிழங்குகளில் மிகப்பெரியதொன்று 85 ருத்தல் நிறையுள்ளதென்ருல் வியப்பாகத்தான் இருக்கும். களி நிலத்துக்கு மரவள்ளி ஏற்றதல்ல காற்று நிறைந்த செம்மண்ணும் உரமும் நிறைந்த நிலமே இதற்கு உகந்தது.

ஒவ்வொன்றிலும் மிகுதியாகக் கிழங்குகள் உண்டாக ஒன்பது அல்லது பத்து மாதங்களாகும். பிலிப்பைன்ஸ், தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில் நம்நாட்டைப்போலல்லாது, இயந்திரங்களின்உதவியால்தான் அறுவடை நடைபெறுகிறது இக்கிழங்கில்மாவுப் பொருள் மிகுதியாக உள்ளது. இதனைச் சுலபமான முறையில் பிரித்தெடுக்கலாம். இதன் உபயோகங்கள் பல. செய்து முடிந்த துணிகளுக்குப் பளபளப்பு ஊட்டுவதற்கு இம்மாவைக் சஞ்சியாகச் செய்து பயன்படுத்துகின்றனர். மலாயாவிலும் ஜாவாவிலும் செயற்கை முத்துக்கள் செய்வதற்கு இம்மாவைப் பயன்படுத்துகின்ருர்கள். ரொட்டி பிட்டு போன்ற உணவு வகைகளைச் செய்யவும் மிக உபயோகமாகின்றது. குளுகோஸ் பிசின் செய்யவும் இது பயன்படுகிறது. இம்மாவைக் கோதுமை மாவுடனும் மற்ற மாவுகளுடனும் கலந்து உபயோகிக்கவேண்டும். இதைப் பலவழிகளில் நாம் உணவாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

---

## அறிவுச் செல்வம்

வேளாண்மைத் துறையில் அணுவின் உதவியால் பெரும் நன்மையினைப் பிரிட்டன் எய்துகிறது. பிரிட்டனில் உள்ள அறிவியலார் கதிரியக்கமுள்ள ஐசடோப்புகளைப் பயன்படுத்திப் பல ஆராய்ச்சிகள் செய்து வெற்றி கண்டுள்ளனர். விளைச்சலை மிகுதியாக்கவும், நோய் எதிர்ப்பு ஆற்றலை வளர்க்கவும், ஐசடோப்புகள் உதவுகின்றன. கதிர் இயக்கமுள்ள, சில தாதுக்களை ஊட்டுவதால் செடியினத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த முடியும் என்றும், கதிரின் சுமை தாங்காமல் கோதுமைப் பயிர் தலைசாய்ந்து சேதமடைவதைத் தடுக்க முடியும் என்றும் பிரிட்டனிலுள்ள அறிஞர்கள் கண்டுபிடித்திருக்கிருர்கள். கதிர் இயக்க ஐசடோப்புகள் மூலம் தான் தழைக்காமலும், அதிகம் நீளாமலும், அத்துடன் புதிய இனப்பயிர்களை உண்டாக்கவும் முடியும் என்றும் தெரிகிறது. ஒரு செடி இரசாயன எருவை எப்படி ஈர்க்கிறது என்று அறியவும், மண் வளத்தைத் தெரிந்து கொள்ளவும் ஐசடோப்புகள் பயன்படுகின்றது.

* * *

மிகக் குறைந்த வெப்பநிலையில் (—459·6 பாகை பாரன் ஹீட்வரை) பொருள்களின் தன்மை எவ்வாறு மாறுபடுகிறது என்பதை அறிவதற்காகப் புதிய ஆற்றல் மிக்க மின்காந்தம் ஒன்றைச் செய்திருக்கின்றனர். இந்த மின்காந்தம் சைக்லோட்ரானில் உள்ள மிகப் பெரிய காந்தங்களைவிட உருவில் சிறியதாக இருந்தாலும் அவைகளை விடப் பன்மடங்கு மிகுதியான ஆற்றல் உடையது. இந்த மின் காந்தத்தில் உண்டாகும் காந்தம் நீண்ட நேரத்துக்கு மாறுபடாமல் ஒரே நிலையில் இருக்கிறது. ஆனலும் இதைவிடத் திறன்மிக்க காந்தங்கள் உண்டாக்கும் காந்த மண்டலங்கள் ஒரு கொடியின் ஆயிரத்தில் ஒரு பங்கு நேரத்திலேயே மாறுதல் அடைந்து விடுகின்றன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. மிகக் குறைந்த வெப்ப நிலையில் ஆராய்ந்து செய்யப்படும் ராடார் கருவிகள், கணக்கிடும் பொறிகள் ஆகியவற்றிற்கு இந்தக் காந்தம் பயன்படுகிறது.

## மனிதனுக்கில்லாத அற்புத உணர்வு பறவைக்கு உண்டு

பறவைகள் பறப்பதைப் பார்த்த மனிதன் தானும் அவ்வாறு பறக்க வேண்டும் என்று விரும்பினுன். விஞ்ஞான அறிவைக் கொண்டு ஆகாய விமானத்தைச் செய்தான். அதில் பறவையைப் போலத்தானும் பறந்து பார்த்தான். இப்போது வான வெளிக் கப்பலில் வானவெளிப் பயணம் செய்து பரீட்சிக்கிருன் மனிதன். இவையெல்லாம் விஞ்ஞான அறிவின் விளைவுகள். விஞ்ஞானிகள் ஒரு புறத்தில் இத்தகைய ஆராய்ச்சிகளைச் செய்து வருகிருர்கள். ஆனல் தேசம் விட்டுத் தேசம் பறந்து செல்லும் பறவைகள் எவ்வாறு திசைகளைக் கண்டுபிடிக்கின்றன என்பதையும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்ருர்கள்.

வட துருவத்தில் 10 பாகை எல்லைக்குள் பறக்கும் பறவையொன்றின் வயது ஆறு வாரங்களாக இருக்கும் போதே அது 11,000 மைல்கள் தூரத்துக்கு அப்பால் உள்ள அண்டாட்டிக் பிரதேசத்துக்குப் பறந்து செல்கிறதென்ருல் அது எமக்கு வியப்பைத் தருகிறதல்லவா? அண்டாட்டிக் பிரதேசத்தில் வசந்த காலத்தைக் கழித்துவிட்டு இந்தச் சிறிய பறவை திரும்பவும் வடதுருவத்துக்குச் சென்று அடைகாக்கும் காலமாகிய கோடை காலத்தைக் கழிக்கிறது.

இவ்வளவு தூரத்தையும் வான வெளியில்பறந்து காலத்துக்குக்காலம் தேசம் மாறிச் செல்வதற்குப் பறவை எந்தத் திசையறிகருவியை உபயோகிக்கின்றது? இறக்கைகளும் அதன் உடற்கட்டும் பறப்பதற்கு உதவலாம். ஆனல் ஒரு தேசம் சென்று மீண்டும் சொந்த ஊர் திரும்பும் பறவையின் நுண்ணிய மூளையில் திசையறிவு இருக்கத்தான் செய்கிறது. மனிதன் கூட பல ஆயிரம் ஆண்டுகள் இது தெரியாது தவித்தான் அல்லவா? 12ம் நூற்ருண்டிலேயே மனிதன் திசையறி கருவி(Compass) யைக் கண்டுபிடித்தான். இது கண்டு பிடித்து 300 ஆண்டுகளுக்குப் பின்னரே கொலம்பஸ் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்தார். ஆனல் பறவைகள் பல லட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே மிகுந்த மனத்தைரியத்துடன் பூகோளத்தின் எல்லாப் பாகங்களிலும் திசையறிவுடன் சஞ்சரித்தன. இவ் விஷயத்தில் மனிதன் பறவைக்குச் சளைத்தவன்தான். பறவைகள் எவ்வாறு இதைச் சாதித்து வருகின்றன என்பதை இன்னும் மனிதன் ஆராய்ந்தே வருகிருன். திசையறிவுடன் தான் பறவைகள் தேசம் விட்டுத் தேசம் செல்கின்றன என்பதற்குப் பல விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி, முடிவுகள் அத்தாட்சிகள் உள்ளன. சிறிய பறவைகளின் சிறிய மூளைகளின் இத்தகைய நுண்ணிய உணர்ச்சியறிவு எவ்வாறு அமைந்துள்ளது என்பது விஞ்ஞானிகளுக்கு வியப்பையளிக்கின்றது.

சென்ற 18 ஆண்டுகளாகச் சில விஞ்ஞானிகள் தேசம் விட்டுத் தேசம் செல்லும் பறவை இனங்களை ஆராய்ச்சி செய்து வருகிருர்கள். வெளிச்சத்தின் உதவியோடு மனிதன் எவ்வாறு தரையில் திசைகளைக் கண்டு அறிகிருனே, அவ்வாறு தேசம் விட்டுத் தேசம் செல்லும் பறவைகளும் வானவெளியில் திசையை அறிகின்றன என்று இவ் விஞ்ஞானிகள் கூறுகின்ருர்கள். அத்தகைய உணர்வு அவற்றின் மூளையில் உண்டு என்று கருதுகிருர்கள். அற்புத உணர்வைப் பறவைகளின் மூளையிலும் இறைவன் படைத்திருக்கிருன் அல்லவா?

---

## ஒரு குலமாய் வாழுவோம்

தமிழின் பெருமைகளைப் பேசுவோம்—பழம்
தமிழிற் புதிய வொளி வீசுவோம்.
தமிழர் ஒரு குலமாய் வாழுவோம் — இளம்
தமிழர் தமிழ் விரதம் பூணுவோம்.

சுற்றியுள்ள நாடுகளை நோக்குவோம் — அங்கே
சொக்கும் புதுமை நமதாக்குவோம்.
வெற்றி முரசுலகெலாம் சாற்றுவோம் — நாம்
விண்ணுயர ஜெயக் கொடி யேற்றுவோம்.

## நவராத்திரிவிழா

நாவலப்பிட்டி ரயில்வே பங்களாவான ஸ்ரீ வேல்முருகுவின் இல்லத்தில் நவராத்திரிவிழா கொண்டாடப்பட்டது. கதிரேசன் கரில்லூ அதிபர் திரு. க. சபா. ஆனந்தர், ஸ்ரீமதி பொன்னம்மாள் கிருஷ்ண பிள்ளை ஆகியோர் பேசினர். திருமதி ஸ்ரீ காந்தி கணநாதன் இன்னிசை விருந்தளித்தார்.

நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட நவராத்திரி விழா நாவலப்பிட்டி அரசினர் ஆஸ்பத்திரி பிரதம அப்போதிக்கரி திரு. நாகமணியின் இல்லத்தில் நடைபெற்றது. ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா சக்தி வழிபாடு பற்றி பேசினர்.

### சாரதா இல்லத்தில்

நாவலப்பிட்டி சொய்சாக்கலை வட்டாரத்திலுள்ள சாரதா மாணவிகள் விடுதியில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. ஹாஸ்டல் அதிபர் செல்வி. க. சிவபூஷணம் இவ் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

ஆசிரியர் திரு. வே. காசித்தம்பி சொற்பொழிவாற்றினர் பக்திப் பாடல்களும் இடம் பெற்றன.

---

மாவிட்டபுரம், வியாழன்

விஜயதசமி விழாவை மாவிட்டபுரத்தில் தமது அலுவலகத்தில் நடாத்திய "முத்தமிழ்க் கலை மன்றம்" நடேஸ்வராக்கல்லூரி ஆசிரியர் ஏ. ரி. பொன்னுத்துரையினுல் தயாரிக்கப்பட்ட, 'திருக்குறளை' அடிப்படையாகக்கொண்ட "பண்பின் சிகரம்" என்ற சமூக நாடகத்தின் ஆரம்ப ஒத்திகையை கடவுள் வழிபாட்டோடு நடாத்தினர்.

சுன்னுகம், புதன்

சுந்தரோடை வத்தாக்கை அம்மன் கோவிலில் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

திரு. தி. சிவகுருநாதர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் வித்துவான் சி. ஆறுமுகம் பேசுகையில் நாம் நவராத்திரி தினத்தில் மாத்திரம் கலைத்தெய்வத்தை வழிபடாது நாள்தோறும் கலைத்தெய்வத்தை வீடுகளிலே பிரார்த்திக்க வேண்டும். இளம் பிள்ளைகளிடத்து கலை ஆர்வம் உண்டாக்குவதற்கு இப்படியான விழாக்கள் மிகவும் அவசியம் என்ருர்.

வழக்கறிஞர் திரு. நம சிவப்பிரகாசம் பேசுகையில் இப்பொழுது மக்களிடையே மதப்பற்று உண்டாகிறதென்ருர்.

திரு கோபாலசாமி பக்திப் பாடல்கள் பாடினர்.

---

## களுத்துறை சுகாதார ஊழியர் சங்கம்

களுத்துறை, புதன்

அரசினர் சுகாதார சேவைத் தொழிற் சங்கத்தின் களுத்துறைக் கிளைக் கூட்டம் இம் மாதம் 15 ந் திகதி கிளைக் காரியாலயத்தில் நடைபெற்றது. காரியதரிசி திரு. எச். வியனகே கூட்டத்தின் நோக்கம் பற்றிப் பேசினுர்.

களுத்துறை அரசினர் வைத்தியசாலைச் சேவையாளர்கட்கென ஓர் ஸ்தல நிர்வாகசபை அமைக்கப்படவேண்டுமென காரியதரிசி கூறிய யோசனைக்கிணங்க திரு. எஸ். ஏ. டி. லயனலைத் தலைவராகவும் திரு. க. துரைராசாவை உப தலைவராகவும் கொண்ட சபை நிறுவப்பட்டது. இச்சபையின் காரியதரிசியாக திரு. கேர்மன் சுபசிங்காவும் உப காரியதரிசியாக திரு. நேமிஸ் ருபசிங்காவும் தனதிகாரியாக திரு. ஏ. சமரவீராவும் தெரிவு செய்யப் பெற்றனர்.

விசேஷ அழைப்பின் மீது இக் கூட்டத்தில் கலந்து கொண்ட தாய்ச் சங்க உப காரியதரிசி திரு. டபிள்யு. கலனியங்கொட பேசுகையில் ஊழியர்கள் ஒரே சங்கத்தில் அங்கம் வகிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெகிய.

# அணுசக்திக்கும் மிஞ்சிய பெரும் சக்தி

## நாடெங்கும் நவராத்திரி விழா

உடுப்பிட்டி, வெள்ளி

"இன்று மட்டுமன்றி, என்றும் உலகை இயங்கச் செய்வது சக்தியாகும். ஆகவே தான் தமிழுலகு கலையைப் பெண்ணுக உருவகித்து கலைவாணிக்கு ஆண்டுதோறும் விழாவெடுக்கிறது. வீரத்தையும், பொருளையும், கல்வியையும் தமது அணிகலன்களாகக் கொண்ட தமிழர் இன்றும் நவராத்திரியாகக் கொண்டாடி வருகின்றனர்" என்று கரவெட்டி வாணிகலைக் கழகத்தால் நடாத்தப்பட்ட வாணிவிழாவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் கூறினர்.

அடுத்துப் பேசிய பண்டிதை ப. தேவகி பெண்மைக்கு சமத்துவமளித்த தோடமையாது அதற்கு பெருமையுமளிக்கவும் முன்வந்த தமிழன் பெண்ணைக் கல்வியின் திருவுருவாகக் கண்டான். விழாவெடுத்தான். வாழ்வை இயக்கும் வளமிகு சக்தியாகக் கொண்டான். எனவே, கலைவாணிக்கு எடுக்கும் விழா சக்திக்கு எடுக்கும் விழாவாகும்" என்ருர்.

திரு. வி. மகாலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பண்டிதர் கே. விரகத்தியும் பேசினர்.

சங்கீத பூஷணம் திரு. எஸ். கோவிந்தராஜனின் இன்னிசைக்கச்சேரியும் நடைபெற்றது.

வேலணை, வெள்ளி

வேலணை மத்திய மகாவித்தியாலய விடுதி மாணவர்களால் நவராத்திரி தினம் கொண்டாடப்பட்டது. செல்வன் சி. மன்றுநாடி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. செல்வன் ந. இரத்தினவேல் "நவராத்திரி" என்னும் பொருள் பற்றிப் பேசினர். சங்கீத பூஷணம் பொ. சத்திரசேகரும், நீலகண்ட குழுவினரும், அரசரத்தினம் குழுவினரும் இசைவிருந்தளித்தனர்.

வேலணை, வெள்ளி

"கடவுளை அன்னையாக—பெண்மை வடிவில் கண்டு போற்றியது தமிழர் மரபு. அவற்றின் சின்னமாக இருப்பது இவ் விழா. மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத வீரம், செல்வம், கல்வி என்பவற்றை வேண்டி கொற்றவை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய வடிவில் சக்தியை வழிபடும் நாட்களே நவராத்திரி எனப் படுகிறது".

இவவாறு வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவுக்கு தலைமை வகித்துப் பேசிய பண்டிதர் க. இராசையா தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

வைத்தீசுவர வித்தியாலய ஆசிரியர் வித்துவான் பொன். அ. கனகசபை பேசுகையில் கூறியதாவது:—

"நாம் வாழ்வதற்காகத்தான் விழாவெடுக்கிரேம். வான் முகில் வளாது பெய்க என்று வாழ்த்துகிரேம் மழை பெய்வதால் அது நன்மையடைவதில்லை. நாம் தான் பயன் பெறுகிரேம். அதேபோல் விழாக்களையும் நமது நன்மையைக் கருதியே எடுக்கின்ரேம். ஒரு குடும்பத்துக்கு அச்சாணியாக இருப்பவள் தாய். தாயைப் போன்றவளே பராசக்தி.

இசைமணி செல்வி எஸ். இரத்தினத்தின் சங்கீதக் கச்சேரியும், நடன ஆசிரியர் சுப்பையாவின் மாணவிகளினது நடனமும் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை: இந்துக் கல்லூரியில் வியாழக்கிழமை காலை கல்லூரி மாணவர் சங்க ஆதரவில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர் சங்கீதகலாநிதி திரு. பொன்னம்பலம் 'மீனுட்சி கல்யாணம்' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார். சங்கீதபூஷணம் இநாகேந்திரசர்மா புலலாங்குழல் வாசித்தார்.

கொட்டடி சனசமுக நிலையவுதினர் வியாழக்கிழமை இரத்நிலைய வாசிகசாலையில் கலைமகள் விழாவைக்கொண்டாடினர். திரு. சோ. தவலிங்கம் விழாவில் பேசுகையில் "கலைமகள் அறிவுத்தாய் நாம் பிறரைக் குறைகூறுவதை விடுத்து நமது குறைகளை தாயிடம் கூறினல் அவள் அவற்றைத் தீர்க்க முன்வருவாள். நாம் நமது வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக வழிபட்டால் தான் தாய் மனம் குளிரும். அவள் கருணை மழை பொழிவாள்" என்று கூறினர்.

சங்கீதபூஷணம் இ நாகேந்திரசர்மாவின் புல்லாங்குழல் கச்சேரியும் நடைபெற்றது.

### வெஸ்ரேல் தோட்டத்தில்

நாவலப்பிட்டி, வியாழன்

கொத்மலையைச் சேர்ந்த வெஸ்ரேல் தோட்டத்தில் நவராத்திரி விழா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில் நடைபெற்றது. டாக்டர் திரு டி. செல்லையா இவ்விழாவிற்கு தலைமை வகித்து கூட்டுவழிபாடு நடாத்தினர். பெருந்தொகையான தொழிலாளர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

### கிரேகற் தோட்டத்தில்

நாவலப்பிட்டியைச் சேர்ந்த கிரேகற் தோட்டத்திலும் நவராத்திரி விழா கோலாகலமாக கடந்த ஒன்பது தினங்களாக, இத்தோட்டத்தில் புதிதாகக் கட்டப்பெற்ற ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெற்றது. பிரஸ்தாப தோட்டப் பாடசாலையின் ஆசிரியர் திரு. தேவசாமிஜயர் கூட்டுவழிபாடு நடாத்தினர்.




பீ. சீ. சீ.

பீ. சீ. சீ.

ஸ்தாபனத்தார் தயாரிக்கும்

சுத்தமான

குக்ஸ்ஜோய் எண்ணெ

★ சுகாதார முறைப்படி தயாரித்து போத்தலிலும் ரீன்களிலும் அடைக்கப்பட்டது.

★ சமையல் செய்வதற்கு மிக இலகுவானதும் உருசியுமுள்ளதும்.

நீங்கள் குக்ஸ்ஜோய் வாங்கும் பொழுது எப்பொழுதும் பீ. சீ. சீ. அடையாளத்தையே பார்த்து வாங்குங்கள்.

ஏஜெண்ட்ஸ்:

மு. நா. நல்லசேகரம் அன் சன்ஸ்

பண்டத்தரிப்பு.


## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி 21-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரைஇசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வி. கே. குமாரசாமி — வயலின்.

இரவு 7-00 நேயர்கடிதம், 7-30 என். இராஜு - பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-45 லயவின்யாசம், 10-00 நேயர் விருப்பம்.

**ஞாயிறு 22-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-00 தேர்ந்தஇசை, 8-30 ஞானஅஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப் பாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 டி. எம். வேதார்ணியம் - பாட்டு, 6-10 குரல்வகை, 6-30 கோட்டுவாத்தியம்.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 யோகேஸ்வரி இராஜி - பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'எங்கிருந்தோ வந்தான்' - நாடகம், 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

**சனி 21-10-61**

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 திருவீழிமிழலை என். சுப்பிரமணியபிள்ளை - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 திருவீழிமிழலை என். சுப்பிரமணியபிள்ளை - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'வாழ்ந்தாலும் மறைந்தாலும்' - நாடகம், 8-00 திரைப்படஇசை, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

**ஞாயிறு 22-10-61**

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 கே. வி. ராஜாராமய்யர் - புல்லாங்குழல் 8-15 சீர்காழி எஸ். கோவிந்தராஜன்-பாட்டு.

பகல் 12-00 நீங்கள்கேட்டவை, 12-39 சூரியகாந்தி கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 நாகஸ்வரம், 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 டி. ஆர். கிருஷ்ணமாச்சாரி - வீணை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கும்பகோணம் வி. பி. ராஜேஸ்வரி - பாட்டு, 8-30 கே. வி. ராஜாராமய்யர் - புல்லாங்குழல், 930 டெல்லி அஞ்சல், 9-45 ஒலிப்பதிவுகள்.

——

## சரவணையில் அன்னதானம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை தெங்கங்குளம் நாச்சிமார் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீமீனுட்சிஅம்பாள் ஆலயத்தில் "விஜயதசமி" விழாவையொட்டி அன்னதானம் நடைபெற்றது.


RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே

பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை

யளிப்பதும் இதுவே

மொத்த விற்பனை விநியோகஸ்தர்கள்: மில்லர்ஸ் லிமிட்டெட், கொழும்பு. எம்.கே.எ.ஹமீது அன் கோ, குருணுகலை. ஸன். எச். குமாரசிங்க அன் கோ, காலி. கபூர்ஸ் ஹாட்வெயார் இரத்தினபுரி. யாழ்ப்பாணம் கூட்டுறவு ... பண்டகசாலை, யாழ்ப்பாணம். எச். எ. பகஸ்ராவல அன் பிரதர்ஸ், பதுளை. ஸன். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ் பதுளை. ஸன். எ. செல்லநாயகம் அன் சன்ஸ், மட்டக்களப்பு.







முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

# அச்சுவேலி கொலை சம்பவத்தில் ஐவர்மறியலில்வைக்கப்பட்டனர்

## அடையாள அணிவகுப்புக்குப் பின் ஒருவர் விடுதலை

தெல்லிப்பழை, வெள்ளி

அச்சுவேலியைச்சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அச்சுவேலியில்வைத்து கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக மல்லாகம் நீதவான் விசாரணை நடத்தினர். விசாரணையின்போது பிரஸ்தாப கொலையில் சம்பந்தப்பட்டவர்களெனச் சந்தேகிக்கப்பட்ட அச்சுவேலிவாசிகளானசின்னத்தம்பி தவராசா, சபாபதி, சுப்பையா, சுப்பையா கனகரத்தினம் ஆகிய நால்வரும் நீதிபதி முன்னிலையில் சரணடைந்தனர்.

பின்னர் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போது முன்பு பொலிசாரால் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களில் ஒருவரான மயிலு சின்னத்தம்பி என்பவரைச் சாட்சிகள் எவரும் அடையாளம் கண்டுபிடிக்கத் தவறியமையால் நீதிபதி மயிலு சின்னத்தம்பியை விடுதலை செய்தார்.

இளையதம்பி சின்னத்தம்பி, சின்னத்தம்பி தவராசா,. சபாபதி, சுப்பையா,சுப்பையா கனகரத்தினம் ஆகியோரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை இம்மாதம் 27-ம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

—

## செங்கோட்டை ரயில் தடம்புரண்டது

சென்னை, அக்.20

மதுரை - செங்கோட்டை ரயில்வண்டி இன்று விருதுநகருக்கும் மணியாச்சிக்குமிடையில் பாதையைவிட்டு விலகியது. என்ஜினும் 9 பெட்டிகளும் பாதையைவிட்டு விலகியபோதிலும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## மாணவர்களுக்கு பால் விநியோகம்

சென்னை, அக். 20

சென்னையில் 1,24,000 பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக பால்விநியோகம் செய்ய சென்னை கார்ப்பரேஷன் ஒழுங்கு செய்துள்ளது.

கத்தோலிக்க நிவாரண சேவை ஸ்தாபனம் 50,000 ரூத்தல் பால் மாவை சென்னைக்கு உதவியுள்ளது.

இம்மாதம் 23ந் திகதி மாணவர்களுக்கான இலவ்ச பால் விநியோகம் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

—

## மாண்டவர் தொகை அதிகரிப்பு

கல்கத்தா, அக். 20

கல்கத்தாவுக்கு அருகில் இன்று அதிகாலை ஏற்பட்ட ரயில் விபத்தில் மாண்டவர்கள் தொகை இப்பொழுது இருபத்தொன்பதாக அதிகரித்துள்ளது. காயமடைந்தவர்களின் தொகையும் 120 ஆக உயர்ந்துள்ளது.

இவ்விபத்தில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு ராஷ்டிரபதி அனுதாபம் தெரிவித்துள்ளார். ரயில்வே மந்திரி திரு. ஜகஜீவன்ராம் விபத்து நடந்த ஸ்தலத்துக்குச் சென்றுள்ளார்.

# "கல்வியுடன் சாதனையும் அவசியம்"

## படிப்பகத் திறப்புவிழாவில் உதவி வித்தியாதிபதி உரை

தெல்லிப்பழை, வெள்ளி

"சமய வாழ்க்கையில்லாமல் சமயம் வளரமுடியாது. சமயத்தை வளர்க்கத் துவேஷ மனப்பான்மை கூடாது. அன்பினாலேதான் சமயத்தை வளர்க்க வேண்டும். ஏனைய சமயங்களை அறிய வேண்டும். உண்மையை யுணரவேண்டும். அவற்றை எமது சமயத்திலே காலத்திற்கேற்றவாறு சேர்த்துக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் சைவப்புலவர்கள் படிப்பகத் திறப்புவிழா கீரிமலைச் சிறுப்பர் மடாலயத்தில் வியாழக்கிழமை இரவு நடைபெற்றபோது தமது தலைமையுரையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:-

நாம் சைவர்களாக வாழவேண்டில் சைவமணம் கமழும் சூழலை உண்டுபண்ணவேண்டும். சமய சின்னங்களை இல்லங்களிலும் பாடசாலை மண்டபங்களிலும் வைக்க வேண்டும். கல்வியுடன் சாதனையும் வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம் பேசுகையில், சைவப் புலவர்கள் நமது முன்னோர் வகுத்துள்ள மரபுப்படி சமய வாழ்க்கை வாழ்ந்துகாட்ட வேண்டும். எங்கள் சமயத்தைப் பற்றி நன்குணர வேண்டும் என்று குறிப்பிட்டார். சைவப் பிரசாரகர் திரு. த. குமாரசுவாமிப்புலவர் சைவாசாரப்படி சைவப்புலவர்கள் வகுப்பினை ஆரம்பித்து வைத்தார். வித்துவான் திரு. வ. செல்லையா அனைவரையும் வரவேற்றுப் பேசினர். சைவப் புலவர் திரு. ச. சச்சிதானந்தம் நன்றி கூறினர்.

# 'பாடசாலைகளின் வளர்ச்சிக்கு மக்களின் ஆதரவுஅவசியம்'

## புத்தூர் கல்லூரிவிழாவில் கல்வி அதிகாரி உரை

நீர்வேலி, வெள்ளி

"பாடசாலைகளை நிறுவியதுடன் கடமை தீர்ந்துவிட்டதாகக் கருதக்கூடாது. அவற்றின் வளர்ச்சியிலும் நாம் கண்ணும்கருத்துமாக இருத்தல் வேண்டும். நான் இக் கல்லூரியில் அதிபராக இருந்த காலத்திலேயே புத்தூர் கல்லூரி, மாணவர் ஒழுக்கத்துக்கு நிலைக்களனாக இருந்துவருகின்றதைப் பாராட்டவேண்டும். மாணவர்கள் திறமைசாலிகளாகவும் ஒழுக்கமானவர்களாகவும் இருக்கவேண்டும். ஆசிரியர்களும் பாடசாலைகளும் எனது மாணவன் என்று பெருமைப் படக்கூடியதாக மாணவர்கள் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்."

இவ்வாறு வியாழக்கிழமை இரவு புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் நடைபெற்ல வருடாந்தப் பரிசளிப்பு, ஸ்தாபகர்தின விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசிய பிரதம விருந்தினரான யாழ்ப்பாணம் கல்வியதிகாரியும் முன்னாள் அக் கல்லூரி அதிபருமாயிருந்த திரு. எஸ். தணிகாசலம் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

### எல்லோரும் சமம்

பாடசாலைகளில் கொடுக்கும் இறவச பணிஸையும், பாலையும் இழிவாகச் சில மாணவர்கள் கருதுகிறார்கள். கல்வியதிகாரியாக நான் இருக்குமட்டும் எனது பிள்ளைகளை இவற்றை பாடசாலைகளில் பெற்றுச் சாப்பிடுமாறு நான் கட்டாயப்படுத்தியுள்ளேன். மாணவர்களிடையே பெரிதுசிறிது என்ற பேதம் கூடாது. எதையும் இழிவெனக் கருதுவது மாகாது. காலச்சுழலில் பெரிது சிறிது என்ற பேதத்திற்கு இடமில்லாமல்போய்விடுகிறது. எல்தோரும் சமம் என்கிற உயர்நிலை ஏற்படவேண்டும்:

பாடசாலையின் வளர்ச்சியில் ஆசிரியர்களும் மாணவர்களும் கவனம் செலுத்தி ஒருமைப்பாட்டுடன் எழைக்கவேண்டும்.

இக்கல்லூரி ஸ்தாபகரான காலஞ்சென்ற மழவராயர் கந்தையாவின் தொண்டையும் அவர் பாராட்டிப் பேசினர்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். குமாரசுவாமி தமது வரவேற்புரையில் கூறியதாவது:-

### யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை

யாழ்ப்பாணத்தின் கல்வி நிலையைப் பற்றி வெளியிடத்தில் தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனை உண்மைப்படுத்துவதற்கேனும் நமது கல்விவளர்ச்சியில் நாம் அதிக அக்கறை செலுத்தவேண்டும். உத்தியோகம்கிடைத்தாலென்ன கிடைக்காவிடிலென்ன அறிவு வளர்ச்சியின் பொருட்டு ஒவ்வொருவரும் குறைந்தது ஜி. சி. ஈ. வரையாவது கட்டாயக் கல்வியாகப் பெற வேண்டும். ஒவ்வொருவரும் தமது இயல்புக்கேற்ப கல்வியறிவைக் கூடுதலாகப் பெற வேண்டும்.

### பெற்றோர் கடமை

பிள்ளைகளின் படிப்புக்கு பெற்றோர் அதிக வசதி செய்து கொடுக்க வேண்டும். சில பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்பதில் விருப்பமில்லாமல் கஷ்டப்பட்டு வருவதற்குப் பெற்றோரே முக்கிய காரணமாகும். ஒரு மாணவனைப் பள்ளிக்கூட படலைக்குள் தள்ளிவிட்டால் மாத்திரம் அவன் பூரண கல்விமானாக முடியாது. அதற்கேற்ற வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். ஒரு நாளில் ஒரு மணித்தியாலத்தையேனும் அவர்கள் படிப்புக்கு ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்.

### நலன்புரிசபை

பழைய மாணவர்கள் பெற்றோர் ஆகியோரைக் கொண்ட நலன்புரிசபைகள் திட்டம் பாடசாலைகளுக்கு நன்மையளிக்குமென நான் கருதுகின்றன். மாணவர்களின் கல்வி வசதிக் குறைவுகள் உணவு பற்றாக்குறை முதலிய விஷயங்களிலும் பாடசாலைகளின் வளர்ச்சியிலும் இவர்கள் அக்கறை செலுத்தவேண்டியது அவசியம்.

திரு. எஸ். தணிகாசலம் பரிசில்களை வழங்கினர். கதம்பக் கச்சேரிகளும் இடம் பெற்றன. திரு. கே. மகாலிங்கசிவம் நன்றி கூறினர்.

—

## கூட்டுப்பிரார்த்தனை

வட்டுக்கோட்டை, வெள்ளி

அராலி தெற்கு கரைப்பிட்டி கணபதீஸ்வர ஆலயத்தில் 22-10-61 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு விசேஷ வழிபாடும், கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறும்.

# கள்ளக் குடியேற்றம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திருத்த மசோதா இராணுவத்துக்கு மேலும் அதிகாரங்கள் கொடுக்க வழி செய்கிறது. நாகரிக உலகிலுள்ள எந்த நாட்டிலும் ஒருவரைக் கைது செய்யும் அதிகாரம் அரசாங்க அதிகாரிகளிடம் தான் கொடுக்கப்படுவதுண்டு. அவசரகாலப் பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து அதிகாரத்தை அனுபவித்தவர்கள் அந்த அதிகாரங்களைத் தொடர்ந்து அனுபவிப்பதற்கு பல்வேறு வழிவகைகளைக் கையாளுகிறார்கள். அதில் இந்த மசோதா போன்றதும் ஒன்று.

### அவர்களுக்குக்கூட வசதி அதிகம்!

அரசாங்க அதிகாரிகளின் தன்னிச்சையான நடவடிக்கைகள் காரணமாக சட்ட விரோதமாகக் குடியேறியவரென்று சந்தேகிக்கப்படுபவர்கள் நீண்ட காலத்துக்குத் தடுப்புக் காவல் முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் பிரதம மந்திரியைக் கொலை செய்தவர்களென்று சுப்ரீம் கோர்ட்டினல் குற்றவாளிகளர்கக் காணப்பட்டவர்கள் கூட, தடுப்புக் காவல் முகாமிலுள்ளவர்களை விட சிறந்த முறையில் கவனிக்கப்படுகிறார்கள்.

### துன்புறுத்த அதிகாரம்

இந்த திருத்த மசோதா, தமிழ்ப் பேசும் மக்களைத் துன்புறுத்துவதற்கு இராணுவம், கடற்படை,விமானப்படை ஆகியவைகளின் 'குட்டி' அதிகாரிகளுக்கும் அதிகாரமளிக்கிறது.

### மசோதா நிறைவேறியது

குடியேற்ற வெளியேற்றச்சட்டத் திருத்தமசோதா இரண்டாம்முறையாகவும் நிறைவேறியது. மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது மசோதாவுக்கு சாதகமாக 49 வாக்குகளும் எதிராக 9 வாக்குகளும் கிடைத்தன. அரசாங்கக்கட்சியுடன் ஐக்கிய தேசியக்கட்சி, லங்காசமசமாஜக்கட்சி, எம். ஈ. பி. ஆகியவைகளின் அங்கத்தவர்கள் மசோதாவைஆதரித்து வாக்களித்தனர்.

தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களும் உடுப்பிட்டி எம், பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோரும் நியமன எம். பி. திரு. தொண்டமானும் மசோதாவை எதிர்த்து வாக்களித்தனர்.


சினிமாஸ் திரைகளில் வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!
மனோஹர், தேவிகா நடித்த
பாஞ்சாலி



கிங்ஸ்லி (கொழும்பு
சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த
பாவ மன்னிப்பு

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் - பத்மினி
நடித்த
தூக்கு தூக்கி

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
(நாளை முதல்)
எம். ஜி. ராமச்சந்திரன்
ஈ. வி. சரோஜா
நடித்த
என் தங்கை



இப்பொழுது காட்சியளிக்கிறது!
சாவகச்சேரி தேவேந்திராவில்
தினசரி 6-15, 9-30 மணிக்கு, சனிக்கிழமை காலை மெட்னி
எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி



தங்கவேலு
ராஜம்
பிரேம் நஸீர்
நடித்த



தங்கரத்தினம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.